
தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 54
28.01.2024

# AI பணிகளைப் பறித்தாலும் புதிய வாய்ப்புகள் பெருகும்






இலங்கையின் நிதி நெருக்கடி: சமாளிப்பதற்கான உத்திகள்!
10



எங்கே தேடுவது?
14



கால்நடை மற்றும் கோழிகளுக்கு குறைந்த செலவில் அசோலா ...
16

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# நடைமுறைக்குச் சாத்தியமான ஒருங்கிணைந்த பண்ணையம்




## காணொளி கல்விக்கூடம் - 02

## விளக்கம் தருகிறார் ம.ரஜிந்தன்

**தற்போது எமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கு உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். அதிலும் குறிப்பாக வினைத்திறன்மிக்க விவசாய முயற்சிகள் முயற்சிகள் அதிக பயனைத்தரும்.**

**அதில் மிக முக்கியமாக ஒருங்கிணைந்த பண்ணையம் என்பது மிகவும் குறைந்த அளவினால வெளி உள்ளீடுகளுடன் அதிக விவசாய உற்பத்தியினை பெற்றுத்தரும் ஒரு மாதிரி வடிவம் ஆகும்.**

**நடைமுறைக்கு சாத்தியமான ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பது எப்படி? சும்மா இருக்க விவசாயத்தில் வருமானம் பெறுவது எப்படி?**

**உங்களுக்கு விளக்குகின்றார் விவசாயத்துறை விரிவுரையாளரும், இயற்கை விவசாயியுமான ம.ரஜிதன்.**

ஒருங்கியைந்த பண்ணை ஒன்றை நாம் எதற்காக அமைக்கவேண்டும்?

முதலாவது, சூழல் பல்வகைத் தன்மையை அடையும். அதன் மூலமாக நாம் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாவது, ஒன்றின் கழிவுகளை மற்றொன்றுக்கு உணவாக்கலாம். அதாவது, நாங்கள், ஆடு மாடு வளர்க்கும் போது அதற்கான உணவுகளை வெளியிலிருந்து பணம் கொடுத்து வாங்க வேண்டும். ஆனால், ஒருங்கிணைந்த பண்ணை என்றால், ஒன்றின் கழிவுகளை மற்றொரு பயிருக்கோ அல்லது விலங்குக்கோ உணவாக்க முடியும்.

அப்படி உணவாக்குவதன் நன்மை என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

அண்மையில் பொருளாதார நெருக்கடியால் நாம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டோம். பசளை இல்லாமல், மருந்து இல்லாமல், எரிபொருள் இல்லாமல் பல சிரமங்களை எதிர்கொண்டோம்.

எரிபொருள் விலை அதிகரித்து நாம் ஒரு நட்டத்தை சந்தித்தோம். ஆனால், இவ்வாறு ஒரு பண்ணையை அமைத்தால் அவ்வாறான நிலை குறித்து நாங்கள் அஞ்சத் தேவையில்லை. அதாவது, உலகத்தில் என்ன நடந்தாலும் நாம் அஞ்சத் தேவையில்லை.

### பண்ணை அமைப்பு

இவ்வாறான பண்ணை ஒன்றை அமைக்கும் போது நாம் எவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்?

இவ்வாறான பண்ணைகளில் வீடும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால், வீடும் இருக்கலாம். அத்துடன் ஒரு கிணறும் இருக்க வேண்டும்.

இதில் ஆட்டையும் மாட்டையும் பக்கத்தில் பக்கத்தில் வைக்காமல், தொலைவில் வைக்க வேண்டும். ஆட்டுப் பண்ணைக்கு எதிர்ப் பக்கத்தில் மாட்டுப் பண்ணையை வைக்க வேண்டும். ஏனென்றால், மாட்டை நாங்கள் அவிட்டு விட்டு மேய்ப்போம். ஆட்டுக்கு குழை வெட்டிக்கொண்டுவந்து போடுவோம்.

எங்களுடைய இந்த கூட்டுப் பண்ணையில் பன்றிகளையும் வளர்க்க முடியும். அவற்றுக்கானஉணவுகளையும் நாம்

இந்த பண்ணையிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

கோழிகளை வளர்ப்பதற்கான கூடு வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் அமைந்திருக்க வேண்டும். அதனை ஒரு குளத்துக்கு மேலாக அமைப்பது நல்லது. கோழி மட்டுமல்ல வாத்து போன்றவற்றுக்கான கூடுகளையும் குளத்துக்கு மேல் அமைக்கப்பட வேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கூடுகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் கூடுகளுக்கு கீழ் இருக்கும் குளத்தில் மீன் வளர்க்க வேண்டும். அத்துடன் இந்தக் குளத்தில் தாமரையும் வளர்க்க முடியும்.

இந்த குளத்தை அடுத்துவரும் பகுதிகள் வயல் நிலமாக இருக்க வேண்டும். அங்கு அசோலாவையும் வளர்க்கலாம்.

மற்றைய இடங்களில் தென்னை, கஜு, மாமரம், பலாமரம், தோடை, வாழை, கொய்யா, மாதுளை, கத்தரி, வெண்டி, மிளகாய், வல்லாரை, பொன்னாங்காணி, வெற்றிலை, மிளகு, புசனி ... போன்றவற்றை வளர்க்கலாம்.

இவற்றுடன் ஆடு, மாடு வளர்ப்பதால் கொஞ்ச இடங்களில் புல் வளர்க்க வேண்டும். மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் உணவாக புல்லைக் கொடுப்போம். அந்த ஆடு, மாடுகளின் கழிவுகள் புல்லுக்கு உரமாக - எருவாகக் கிடைக்கும்.

வீட்டுக்கு கொஞ்சம் தள்ளி தேனி வளர்ப்பதற்கான அமைப்புக்களையும் உருவாக்கி வைக்கலாம். தேனிக்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கு நாம் உணவு கொடுக்கத் தேவையில்லை. அவை தாமாகவே போய் அவற்றைத் தேடிக்கொள்ளும். தேனிக்கு நாம் எதுவும் கொடுக்கத் தேவையில்லை. ஆனால், அவற்றிலிருந்து தேனை மட்டும் நாம் எடுத்துக்கொள்ளலாம்.

இதில் கொடிகளாக வளரும் பயிர்களை வேலிகளில் படரும் வகையில் வைக்கலாம். அல்லது மரங்களில் வளரும் வகையில் வைக்க முடியும். வேலி முழுமையாக கிளிசரயானை வைக்கலாம்.

முயல், புறா போன்றவற்றை வளர்க்கும் யோசனை இருந்தால், அவற்றை சற்றுத் தொலைவில் வைத்துக்கொள்ளலாம்.

வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு நாய்க் கொட்டில் இருக்க வேண்டும். அது பாதுகாப்புக்கு மிகவும் அவசியம்.

இதில் குளமும், வயலும் சேர்ந்த பகுதிதான் வெளியாக இருக்கும். ஏனைய பகுதிகளில் மரங்கள் இருக்கும். மழை நீர் சேகரிப்புக்கு இந்தக் குளத்தைத்தான் பயன்படுத்தமுடியும்.

அதேவேளையில், மாடு, ஆடு போன்றவற்றுக்கான பண்ணைகளுக்கு இடையில் வரக்கூடிய ஒரு பகுதியில் கூட்டெரு, மண்புழு உரம் தயாரிப்பதற்காக இடம் ஒதுக்கலாம். கறையானை வீட்டிலிருந்து கொஞ்சம் தள்ளி வைக்கலாம்.




புளு கோழிகளுக்கு உணவாகும். கோழிகளின் கழிவுகள் குளத்துக்குள் விழ அவை மீன்களுக்கு உணவாகும். குளத்தில் உள்ள மீன் தண்ணிரையை நாங்கள் வயலுக்கு இறைக்கலாம்.

வயலில் விளையும் நெல்லிலிருந்து பெறும் அரசியை நாம் எமக்கு உணவாக்கலாம். மிகுதியாக வரும் அரிசியை அல்லது அதிலிருந்து வரும் குருணலை கோழிக்கு உணவாகக் கொடுக்கலாம்.

மிகுதியான சில உணவுகளை மீனுக்குக் கொடுக்கலாம். பழைய சோறு போன்ற எண்ணெய் இல்லாத கழிவுகளை மீனுக்குக் கொடுக்கலாம்.

மாட்டுப் பண்ணைக்கு அருகில் உயிர் வாயுக் குழி அமைக்க முடியும். அதிலிருந்து பெறப்படும் உயிர் வாயுவை சமையலுக்குப் பயன்படுத்தலாம். உயிர் வாயுவிலிருந்து வரும் கழிவுகளை நாம் வளர்க்கும் மரங்கள் மற்றும் பயிர்களுக்கு உரமாகப் போலாம்.

பன்றிகளிலிருந்து வரும் கழிவுகளைக் கொண்டு தனியான ஒரு உயர்வாயுக் குழு அமைத்து அதிலிருந்தும் உயிர் வாயுவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பண்ணைக்கு நிச்சயமாக சக்தி தேவை. இப்போது மின்சாரக் கட்டணமும் கணிசமாக அதிரித்திருப்பதால், உங்கள் பண்ணையிலேயே உயர்வாயுத் தொட்டி ஒன்றை அமைத்து அதிலிருந்து சக்தியைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தால், உங்களுக்கு செலவு மிகுதியாகும்.

மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்தி உயிர்வாயு செய்வது மிகவும் இலகுவானது. இரண்டு வாளி சாணத்தை கரைத்து அதற்குரிய குழியில் விடுவதன் மூலமாக இதனை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இதன் மூலமாக தினமும் சுமார் மூன்று மணி நேரத்துக்கு சமையல் செய்வதற்குத் தேவையான உயர்வாயுவைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதனைவிட, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான மோட்டர் போன்றவற்றை இயக்குவதற்கும் இந்த உயிர் வாயுவைப் பயன்படுத்தலாம்.

அசோலாவை கோழிக்கு உணவாக்கலாம். அசோலாவில் நிறைய புரதம் இருக்கின்றது. அதனை நாம் பயன்படுத்துவதன் மூலமாக கோழி மாஸ் போன்றவற்றுக்காக பணத்தைச் செலவிடத் தேவையில்லை.

வேலிக் கரைகளில் நீண்டகாலப் பயிராக தேக்கு நடுகை செய்யலாம். நான்கு பக்க கரைகளிலும் பத்து அடிக்கு ஒன்றாக தேக்கு நடலாம். விவசாயிகள் அதனை ஓய்வுதியப் பயிர்கள் என்று சொல்வார்கள். உடல் இயலுமை உள்ள காலத்தில் கஷ்டப் பட்டு வேலை செய்துவிட்டு, உடல் சோர்வு வருங்காலங்களில் இந்த தேக்கு மரங்களிலிருந்து நல்ல காசைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது மின்சாரக் கட்டணம். கணிசமாக அதிகரித்துவிட்டது. அதனால், உங்கள் தோட்டத்தில் சூரிய சக்தி மின்னகலங்களைப் பொருத்துங்கள். உயிர் வாயுவிலிருந்து பெறும் மின்சாரத்துக்கு மேலதிகமாக, சூரிய சக்தி மின்சாரத்தையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

இது அனைவராலும் செய்யக்கூடிய ஒரு ஒருங்கிணைந்த பண்ணை. இதில் மீன்தொட்டி கொஞ்சம் சிரமமானதாக இருக்கலாம். ஆனால், மீன்தொட்டி கட்டாயம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தேவை இல்லை. மீன்தொட்டி இல்லையென்றால், கோழியில் கழிவுகளை கூட்டெருவுடன் சேர்க்கலாம். கூட்டெருவின் பசளையை நாம் பயிர்களுக்குப் போட்டுக் கொள்ளலாம்.

வயலையும், மீன்தொட்டியையும் விட மற்றையவை அனைத்தையும் எல்லோருடைய காணிகளிலும் செய்யலாம். இதன் மூலமாக உங்களுக்குத் தேவையான அனைத்தையும் வெளியே செல்லாமலேயே உங்களுடைய பண்ணையிலிருந்தே நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

பசுமை விவசாயம் அறிவோம் ம. ரஜிதனின் காணொளியை காண இங்கே சொடுக்கவும்.

https://youtu.be/DoIzdcFMjPo

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0764438620

# இதற்கு தடை என்ன?

பாரிய பொருளாதார நெருக்கடியின் பிடியில் சிக்கியுள்ள இலங்கை, அதிலிருந்து மீள்வதற்கு இருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்கின்றதா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது. இந்தளவு நெருக்கடிகளில் பின்னரும் இனவாத அடிப்படையில்யில்தான் பெரும்பாலான விடயங்களை அரசாங்கம் அணுகிறது என்பது இலங்கைக்கு மீட்சி உள்ளதா என்ற கேள்வியைத்தான் எழுப்பியுள்ளது.

இலங்கை அரசாங்கம் விரும்பாத போதிலும், பலாலி விமான நிலையத்தை திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது அனைவருக்கும் தெரியும். இந்தியாவின் அழுத்தம் இதற்கு பிரதான காரணம். விமான நிலையம் திறக்கப்பட்டாலும், சிறிய ரக விமானம் ஒன்று மட்டுமே அங்கு வந்த செல்கிறது. விமான நிலைய ஓடுபாதையை இன்னும் 300 மீட்டர்களால் மட்டும் விரிவாக்கினால் அதிக பயணிகள் பயணம் செல்லக் கூடிய விமானங்கள் அங்கு வந்து செல்ல முடியும். ஆனால் அரசாங்கம் அதற்கு தயாராக இல்லை.

பெரிய விமானங்கள் வருவதென்பது விமானக் கட்டடங்கள் குறைவதற்கு வழிவகுக்கும். அதனால் அதிக உல்லாசப் பயணிகள் யாழ்ப்பாணத்தினூடாக இலங்கைக்கு வருவார்கள். அந்நியச் செலாவணி வருமானமும் அதிகரிக்கும். குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் இந்த வசதியை பயன்படுத்த விரும்புவார்கள். இந்தியாவுடனான வர்த்தகத் தொடர்புகள் வளர்ச்சி அடையவும் இது வழிவகுக்கும்.

பலாலி விமான நிலையத்தின் இந்த அபிவிருத்திக்கு – விஸ்தரிப்புக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருக்கிறது. பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் – அவர்களுடைய காணிகளை அபகரிக்காமலேயே அதனைச்செய்ய முடியும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் அரசாங்கம் அதற்கு தயாராக இல்லை.

இதனைவிட வடக்கில் இருந்து சில பொருட்கள் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுபவை விவசாய பொருட்கள் அல்லது உணவுப் பொருட்கள். நீண்ட நாட்களுக்கு வைத்திருக்க முடியாதவை. வடக்கில் இருந்து சரக்கு விமான சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் இவற்றை உடனடியாகவே உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்க முடியும். அதன் மூலமாக ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியும்.

இது தொடர்பாகவும் அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அதிலிருந்து மீள்வதற்கு உள்ள வழிகளில் இதுவும் ஒன்று. இது தொடர்பாக தமிழ்க் கட்சித் தலைவர்களும் புத்திஜீவிகளும் சுட்டிக்காட்டுகிறார்கள். அரசாங்கம் அது தொடர்பாக எதனையும் செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம் இருக்கமுடியும்?

வடக்கு வளர்வதை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லையா? அல்லது இந்தியாவுடனான தமிழர்களின் உறவு விருத்தியடையும் நீண்ட கால அடிப்படையில் தமக்கு பாதகமானதாக அமையும் என இலங்கை அஞ்சுகிறதா? அப்படி இல்லை என்றால் இதற்கு என்ன தடை?

# அன்புள்ள ஆசிரியருக்கு....




### சுற்றுலா துறைக்கு 2024 பொற்காலமா?

கடந்த காலங்களில் நலிவடைந்திருந்த சுற்றுலாத்துறையில் இந்த வருடம் ஒரு பொற்காலம் என்று தான் சொல்ல வேண்டும்,

தற்போது அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டை ஆக்கிரமித்துள்ளது எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு நன்மை என்கிறது இந்த கட்டுரை ,கட்டுரையை எழுதிய எழுத்தாளருக்கும் தமிழர் பொருண்மியத்திற்கும் நமது நன்றிகள்.

**க. வர்ணன்**

### நம்பிக்கைப் போருளாதாரம்

வேதநாயகம் தபேந்திரன் எழுதி வரும் நம்பிக்கை பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள் உண்மையில் நம்மை சிந்திக்க வைக்கிறது,

இக்கட்டான இந்த பொருளாதார சூழ்நிலையில் சிக்கனமாகவும் இருக்கும் வளத்தினை சரியாக பயன்படுத்தியும் எப்படி வாழலாம் என்பதற்கு உகந்த வழிகாட்டியாக இருக்கிறது தபேந்திரனின் கட்டுரைகள் நன்றி தபேந்திரன் மற்றும் தமிழர் பொருண்மியம்.

**தர்மகுலசிங்கம் கனகசபாபதி**

## தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

## சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை Green media House (Pvt) Ltd என்ற பெயரில், HNB Bank - Jaffna Metro branch - 016010023281 கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ---------------------------------------------------

**முகவரி** - ---------------------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - -----------------------------------

**சந்தாக் காலம்** - -------------------------------------------

**செலுத்திய தொகை** - ----------------------------------------

**செலுத்திய திகதி** - -------------------------------------------

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
28.01.2024




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,67,900 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,83,100 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் இணையப் பாதுகாப்புச் சட்டம், டிஜிட்டல் பொருளாதாரத்தைப் பாதிக்கும் எனக் கூறப்படுவது உண்மைதானா?

**எம்.தங்கராஜா,**
**மட்டக்குளி.**

பதில் – இணையத்தளங்களில் மூலமான தொடர்பாடல்கள் முடக்கப்படுவதால், அதன் பாதிப்பு பொருளாதாரத்திலும் இருக்கும் என்ற கருத்து சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் பெருமளவுக்கு உண்மையும் இருக்கிறது.

சேதன பசளைத் திட்டத்தை கடந்த அரசாங்கம் அவசரமாக செயற்படுத்தியது, இறுதியில் முழு நாடும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. உத்தேச இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலமும் அந்த வகையில் தான் முறையான வழிமுறைகள் ஏதும் இல்லாமல் அவசர அவசரமாக முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றன. ஆனால், அரசாங்கம் இவ்விடயத்தில் அவசரமாக இருக்கின்றது.

உத்தேச இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் 57 சரத்துக்களில் 34 சரத்துகள் அரசமைப்புக்கு முரண் என உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் அரசமைப்புக்கு முரணா, முரணற்றதா என்பதை மாத்திரமே நீதிமன்றம் ஆராயும், கொள்கை ரீதியில் நோக்காது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பிரசாரங்களை தடுப்பதற்காகவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளாதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுகிறார். அதில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் இந்த சட்டமூலத்தின் உண்மை நோக்கம் அதுவல்ல, தற்போதைய டிஜிட்டல் யுகத்துக்கு எதிரான அம்சங்களை உள்ளடக்கிய வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்துக்கு அப்பாற்பட்ட வகையில் நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாக்க மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டிய தேவை உள்ளது. இந்த சட்டமூலம் தொடர்பில் விரிவான பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும்.

இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தின் பெரும்பாலான சரத்துக்கள் நாட்டு மக்களை அச்சமூட்டும் வகையில் காணப்படுகிறது. பிறிதொரு பெயரில் முகப்பு புத்தக கணக்குகளை பாவிப்பது ஐந்து வருட கால சிறைத் தண்டனைக்குரிய குற்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தனது சொந்த அடையாளத்தை வெளிப்படுத்தாமல் முரண்பாடற்ற வகையில் கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. இந்த உரிமை இந்த சட்டத்தில் மீறப்பட்டுள்ளது.

இலங்கையில் சேவையில் உள்ள சமூக ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக பாரிய நெருக்கடிகள் ஏற்படும். இதனால், டிஜிட்டல் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படும். ஏனெனில் டிஜிட்டல் பொருளாதாரம் பெருமளவுக்கு சமூக ஊடகங்களைச் சார்ந்ததாகவே உள்ளது. சமூக ஊடகங்கள் முடக்கப்படும் போது டிஜிட்டல் பொருளாதாரமும் பாதிக்கப்படும்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 800/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 1400/= |
| தக்காளி | - 600/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 150/= |
| கோவா | - 700/= |
| கரட் | - 1400/= |
| பூசணி | - 180/= |
| புடோல் | - 300/= |
| வாழைக்காய் | - 250/= |
| சின்ன வெங்காயம் | - 400/= |
| பெரிய வெங்காயம் | - 400/= |
| பாகற்காய் | - 800/= |
| வெண்டிக்காய் | - 450/= |
| கருணைக்கிழங்கு | - 120/= |
| பயற்றங்காய் | - 800/= |
| லீக்ஸ் | - 450/= |
| கறிமிளகாய் | - 650/= |
| போஞ்சி | - 700/= |
| கீரை - 1 பிடி | - 100/= |
| தேசிக்காய் | - 200/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 206/= |
| கனடா டொலர் - | 232/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 342/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 233/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 399/= |
| சுவிஸ் பிராங் - | 360/= |
| அமெரிக்க டொலர் - | 315/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 215/= |
| கனடா டொலர் - | 243/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 356/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 244/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 415/= |
| சுவிஸ் பிராங் - | 378/= |
| அமெரிக்க டொலர் - | 325/= |

# கடல் மட்டி புறக்குவம் வாறீங்ககளா?




**சுஜி**

எமது மண்வாசனைகளையும் பழமைகளும் காற்றோட போக... இணைய வீதியில் தான் பழமையும் பெருமையும் பேசும் நிலையில் வாழ்ந்து வருகின்றோம்.. எம் அடையாளமாகிய பனையும், அது சார் பயன்களும், பனங்கள்ளும் கருவாடும் நூதன சாலையிலோ அல்லது அச்சடித்த புத்தகத்திலோ எம் தலைமுறையினர் பார்க்கும் காலம் வெகு தொலைவிலில்லை. நாம் மறந்த ஒரு விடயம் நோக்கிய பயணம்...

டிசெம்பர் 31,2016... வருசம் பூரா சந்தோசமா சுத்திற்றன்.... இந்த வருசம் சொல்லப்போனால் பயணம் செய்யுறத்துக்கு எண்டு எழுதி வைச்ச வருசம் தான் போல... இந்த வருசம் ஒண்ணுமே உருப்படியாக் கிளிக்கல... கிடைச்சது அனுபவங்களும் இனிய நினைவுகளும் தான்.

வடமாகணத்துக்குள்ள குறிப்பா மல்லாவி வரை கனதரம் போய் வந்தன்.. அங்க காட்டுக்குள்ள சாரணர் பாசறை வச்சம். இடைக்கிடை மலை நாட்டுக்குப்போறதிலும் குறை வைக்கேல்ல... சரிய இப்ப விசயத்துக்கு வருவம்.

எங்காவது போவம்... வருசக் கடசில புதுசா ஏதாவது இடத்துக்குப் போவம் இண்டதுதான் திட்டம்.... சரி நண்பன் கவிந்தனோட உந்துருளி பண்ணைப் பாலத்தை தாண்டி விரைந்தது... மண்டைதீவுச் சந்தி தாண்ட வாற அல்லைப்பிட்டி திரும்பிற முடக்கில "அலுமினியம் தொழிற்சாலை ஒழுங்கை" எண்டு ஒரு மண் வீதி இருந்த... சரி இண்டைக்கு இந்த இடங்களை பார்ப்பம் எண்டு அந்த வழில விட்டம்... எப்பிடியும் கடற்கரை வரும் ரெண்டு மூணு படம் எடுப்பம் எண்டு விரைஞ்சம்...

இரண்டு பக்கமும் தென்னைமரங்கள், பனை மட்டை வேலி அடைச்ச தேட்டங்கள், புதுசா வேலணைப் பிரதேச சபைக்காரர் போட்ட வீதிப்பெயர் பலகைகள், தார் வீதியாக மாறும் மண் வீதிகள்... நகர வாழ்க்கைக்குள் இருந்து இயற்கையுடன் ஒன்றித்த ஒரு கிராம வாழ்க்கைக்கள் நாம் நுழைந்தோம். ஆள் நடமாட்டம் கொஞ்சம் குறைவு... கிரவல் றோட்டால குத்துமதிப்பா கடல் இருக்கும் திசை நோக்கி எம் பயணம் தொடர்ந்தது. கொஞ்சம் போக ஒரு பனங்கூடல் ஓட கிரவல் றோட்டும் முடிஞ்சுது... சரி ஆனால் எங்கள் புகைப்படக் கருவிக்கு விருந்துதான்.... நடந்து போகக்கூடிய தூரத்தில் கடல்... இயற்கையும் இயற்கை சார்ந்த இடமும்.. பனைமரம் மட்டுமே தனி அழகுதான்..

நானும் கிராமத்தில் வளர்ந்தவன் என்ற வகையில் ஒரு விடயம்.. நாம் எங்கு சென்றாலும்... ஒற்றையடிப்பாதயில் எம் வளர்ப்பு நாய் எம்மை வழி நடத்திச் செல்லும்... இதை நான் உணர்ந்திருக்கின்றேன்... அன்றும் அவர்களின் வளர்ப்பு நாயினை பின் தொடந்து ஒரு ஆச்சியும் அவாவின் 2 பேத்தியும் கையில உரைப்பை நிறைய ஏதோ கொண்டு வந்திச்சினம்... நாங்கதான்.. நல்லாக் கதைப்பமே.... அவா 3 பை நிறைய மட்டி புறக்கிக் கொண்டு போறா.. தங்கிட வீட்டுத்தேவைக்கு தாங்கள் புறக்கிற்றுப்போகினமாம்... எண்டு சொன்னா... சரி எண்டு நாங்கள் மட்டியைப் போட்ட எடுத்திற்று எங்களுக்கான படங்களை எடுக்க தயாராகினோம்...

மட்டியைப் பார்த்த அந்தக் கணமே... இண்டைக்கு நாங்க இந்தக் கடலில மட்டி புறக்கிறம் எண்ட எண்ணம் என்ர மனதில உறுதியாகிற்று... பிறகுதான் கவிந்தனோட கதைக்கேக்க விளங்கிச்சு அவனும் அதே அலை நீளத்தில் தான் பயணிக்கிறான் எண்டு..

மட்டி எண்டால் என்ன??

மட்டி - எல்லாருக்கும் சிப்பி தெரிஞ்சிருக்கும்... மட்டி எண்டு சொல்லுற அதுக்குள்ள இருக்கிற உயிரினம். சிப்பி உருவாகி மூடியே இருக்கும்... இதுவும் ஒருவகை கடல் வாழ் உயிரினம்தான்.. கூடுதலாக சேத்துக் கடலில பொறுக்கலாம்.

சமைக்கிறது எப்பிடி எண்டா - சிப்பியோட சேர்த்து தண்ணில போட்டு அவிக்கணும்.. அப்ப சிப்பி வாய் திறக்கும்.. பிறகு சதைய தோண்டி எடுத்து பொரிச்சோ அல்லது குழம்பு வைச்சோ சாப்பிடலாம்.

சிப்பி அந்தக் காலத்தில சுண்ணாம்பு போட்டு வைக்க பாவிக்கிறவங்க... இப்பதான் பொலித்தீன் யுகத்தில வாழுறமே...

சரி நாங்க மட்டி புறக்கின கதைக்கு வருவம்.

இரண்டு பேரும் மட்டி புறக்கிறதுதான் எங்கிட 2016ல கடைசித்திட்டம் எண்ட முடிவுக்கு வந்தம்.

எனக்கு சின்னனில நெடுந்தீவு பிடாரியார் கோவில் முன் கடலில மட்டி பொறுக்கின அனுபவம் இருக்கு... சரி புறக்குவம் எண்டு... கிழவி வந்த பாதையில் எம் பயணம் தொடர்ந்தது... கடல் சரியான சேறு... இந்தக் கரையில இருந்து பார்த்தா.. மண்டைதீவுக் கரை தெரியும். தெற்கால பார்ந்த யாழ் நகரின் பாரிய கட்டிங்கள் தெரியும்...

சேத்தில இறங்கினால் தண்ணிய கலக்கினத்துதான் மிச்சம்.. ஒண்ணும்

# வரி விளம்பரம்




# classified advertisement

## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

-------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

-------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

-------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் (**Advertisement Collector**) முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

-------------------------------------

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

-------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.
தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

-------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

-------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

-------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

-------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

-------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448


வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.




# வருமான வரி & வற் வரி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பங்கு பரிவர்த்தனை வரி **Share transaction levy** கொழும்பு பங்குச் சந்தை **(CSE)** மூலம் பரிவர்த்தனை செய்யப்படும் பட்டியலிடப்பட்ட பங்குகளின் விற்பனை மதிப்பின் மீது வாங்குபவர் மற்றும் விற்பவர் இருவரிடமிருந்தும் 0.3% பங்கு பரிவர்த்தனை வரி விதிக்கப்படுகிறது .

பொருளாதார சேவை கட்டணம் **Economic Service Charge (ESC)** ஜனவரி 1, 2020 முதல் **ESC** ரத்து செய்யப்பட்டது. தேசத்தை கட்டியெழுப்பும் வரி **Nation Building Tax (NBT) 1** டிசம்பர் 2019 முதல் மேலவு ரத்து செய்யப்பட்டது.

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி **Social Security Contribution Levy (SSCL)** 1 அக்டோபர் 2022 முதல் **SSCL** அறிமுகப்படுத்தப்பட்டது. பின்வரும் நபர்கள் **turnover SSCL** செலுத்த வேண்டும்.

**A:** எந்தவொரு பொருளையும் இலங்கைக்கு இறக்குமதி செய்யும் எந்தவொரு நபரும் (பயணிகளின் தனிப்பட்ட சாமான்களில் உள்ள எந்தவொரு பொருளையும் தவிர): பொறுப்பான **turnover** (விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களைத் தவிர வேறு இறக்குமதியின் போது ஏயுவு நோக்கத்திற்காக கண்டறியப்பட்ட எந்தவொரு பொருளின் மதிப்பும்)

**B.** எந்தவொரு பொருளின் உற்பத்தி வியாபாரத்தையும் மேற்கொள்ளும் எந்தவொரு நபரும்: **turnover** (விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் அல்லாமல் உற்பத்தி செய்யப்படும் எந்தவொரு பொருளின் தொடர்புடைய காலாண்டிலும் இலங்கையில் விற்பனையிலிருந்து பெறத்தக்க தொகையில் **85%).**

**C.** எந்தவொரு சேவையையும் வழங்கும் வணிகத்தை மேற்கொள்ளும் எந்தவொரு நபரும்பொறுப்பான **turnover** (விலக்கு அளிக்கப்பட்ட சேவைகளைத் தவிர வேறு ஏதேனும் தொடர்புடைய காலாண்டில் இலங்கையில் ஏதேனும் சேவையை வழங்குவதன் மூலம் பெறத்தக்க தொகை).

**D.** எந்தவொரு பொருளின் மொத்த அல்லது சில்லறை விற்பனையை மேற்கொள்ளும் எந்தவொரு நபரும் (மேலே **(gp)** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவரால் விற்பனை செய்யப்படாத வரை): **turnover** (விற்பனையிலிருந்து பெறப்படும் தொகையில் **50%)** விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களைத் தவிர வேறு ஏதேனும் பொருட்களின் தொடர்புடைய காலாண்டில் [விநியோகஸ்தர்களுக்கு **25%]).** "நபர்" என்பது நிறுவனம், அமைப்பு அல்லது குழு, பங்குதாரர்கள் கூட்டாண்மையையும் உள்ளடக்கியது.

பொருட்கள் என்பது ஏதேனும் தயாரிப்பு உற்பத்திப்பொருள் அல்லது விவசாய அல்லது தோட்டக்கலை பொருட்கள் ஆகியவை அடங்கும். துறைமுகம் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி **Port and Airport Development Levy (PAL)** குறிப்பிட்ட பொருட்களுக்கு **PAL** விதிக்கப்படுகிறது. நிலையான விகிதம் 6 டிசம்பர் 2019 முதல் **7.5%** இலிருந்து **10%** ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிலையான விகிதத்தைத் தவிர, மூன்று விருப்பமான கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. **NBT**க்கு உட்பட்ட உற்பத்திப் பொருள் மீதான **PAL** இன் இத்தகைய சலுகை விகிதம் 2.5% அதிகரித்துள்ளது.

இருப்பினும், **NBT** இல் இருந்து விலக்கப்பட்ட உற்பத்திப்பொருளுக்கு **PAL** விகிதம் மாறாமல் இருந்தது. சுற்றுலா வளர்ச்சி வரி **Tourism development levy** சுற்றுலா மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் நிறுவனங்கள் அத்தகைய நிறுவனங்களின் **turnover** விகிதத்தில் **1%** செலுத்த வேண்டும்.

தொலைத்தொடர்பு வரி **Telecommunication levy** தொலைத்தொடர்பு சேவைகளுக்கான தொலைத்தொடர்பு வரி **15%** (இந்த விகிதம் ஜூன் 1, 2022க்கு முன்பு **11.25%** ஆக இருந்தது). - உள்ளூர் வரிகள் **Local taxes** வரிகள் (பொதுவாக விகிதங்கள் என்று அழைக்கப்படுகின்றன) தற்போது நிலம் மற்றும் வளாகத்தின் உரிமையாளர்களிடமிருந்து ஆண்டுதோறும் சொத்துக்கள் அமைந்துள்ள பகுதிகளின் உள்ளூர் அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டு சேகரிக்கப்படு




கின்றன. இந்த அதிகாரிகள் சில வணிக நிறுவனங்களிடமிருந்து வருடாந்திர உரிமக் கட்டணங்களையும் வசூலிக்கின்றனர்.

பெறுமதி சேர் வரி என்றால் என்ன? - யாரெல்லாம் வாட் வரிக்கு பதிவு செய்யணும்? வாட் வரியை கடைகளில் அறவிடலாமா? யாரெல்லாம் அறவிடலாம்? - வாட் வரிக்கான வருமான எல்லை என்ன? இலங்கை அரசு இறைவரி திணைக்களத்தின் அங்கிகரிக்கப்பட்ட இணையதளத்தில் இருந்து கீழ் வரும் தகவல்கள் எடுக்கப்பட்டது.

பெறுமதி சேர் வரி என்றால் என்ன? மதிப்புக் கூட்டு வரி அல்லது பெறுமதி சேர் வரி (**value-added tax**) என்பது, பரிமாற்றங்களின்போது அதாவது விற்பனையின் போது விதிக்கப்படுகின்ற வரியாகும். ஆனால், ஒவ்வொரு பரிமாற்றத்தின் போதும் அதிகரிக்கின்ற அல்லது கூடுகின்ற மதிப்பின் அடிப்படையிலேயே இவ்வரி விதிக்கப்படுகின்றது. பெறுமதி சேர் வரியானது பொருட்கள் மற்றும் சேவைகள் வரியை பதிலீட்டம் செய்து பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்ச்சியின் மீதான வரியாகவும் காணப்படுகின்றது.

இது பொருட்கள் மற்றும் சேவைகளின் உள்நாட்டு நுகர்வின் மீது விதிக்கப்படும் வரியாகும். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் இலங்கையின் சட்ட ரீதியான எல்லைகளுக்குள் வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் என்பன இவ்வரி விடயத்திற்கு உள்ளாகின்றன. இது பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலியின் ஒவ்வொரு நிலையிலுமுள்ள அதிகரித்த பெறுமதியின் மீது விதிக்கப்படும் ஓர் பல்நிலை வரியாகும். இந்த வரியானது, இறுதி அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளின் இறுதி பயன்பாட்டாளரினால் பொறுப்பேற்கப்படுகின்றது.

இது ஒரு மறைமுக வரியாகும். இறுதி பயன்பாட்டாளரினால் செலுத்தப்பட்ட தொகைக்கு சமமான தொகையினை அரசாங்கம் உற்பத்தி மற்றும் விநியோக சங்கிலியிலுள்ள அனைத்து இடைநிலை வழங்குனர்களினூடாக இறுதியில் பெற்றுக் கொள்ளும். இலங்கையில் வருமான வரி மாதத்துக்கு ஒரு இலட்சமும் அதற்கு கீழேயும் வருமானம் பெறுவோர் செலுத்த தேவை இல்லை. ஒரு இலட்சத்துக்கு மேல் வரும் ஒவ்வொரு ரூபாய்க்கும் வருமான வரி செலுத்தப்பட வேண்டும்.

**பொருட்கள் என்பது ஏதேனும் தயாரிப்பு உற்பத்திப்பொருள் அல்லது விவசாய அல்லது தோட்டக்கலை பொருட்கள் ஆகியவை அடங்கும். துறைமுகம் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரீ ழசவ and Airport Development Levy (PAL) குறிப்பிட்ட பொருட் களுக்கு PAL விதிக்கப்படுகிறது. நிலையான விகிதம் 6 டிசம்பர் 2019 முதல் 7.5% இலிருந்து 10% ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிலையான விகிதத்தைத் தவிர, மூன்று விருப்பமான கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. NBTக்கு உட்பட்ட உற்பத்திப் பொருள் மீதான PAL இன் இத்தகைய சலுகை விகிதம் 2.5% அதிகரித்துள்ளது.**

# இலங்கையின் நிதி நெருக்கடி: சமாளிப்பதற்கான உத்திகள்!






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதுடன், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அதிக வரி விதிப்புகள் காரணமாக பல மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறி வருகின்றனர். இது வணிகர்கள், தனிநபர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பல காரணிகள் பங்களித்துள்ளன.

- அதிக அளவிலான கடன்: நாட்டின் வெளிநாட்டுக் கடன் சுமை சமீப வருடங்களில் அதிகரித்து, நிதிக் கடமைகளைச் சந்திப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.
- அதிகரித்து வரும் பணவீக்கம்: அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை படிப்படியாக அதிகரித்து, ஊதிய வளர்ச்சியை விஞ்சி, வாங்கும் சக்தியைக் குறைத்து வருகின்றது.
- நாணயத் தேய்மானம்: முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு கணிசமாக பலவீனமடைந்துள்ளது, இதனால் இறக்குமதிகள் அதிக விலை கொண்டவை.
- சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி: வெளிநாட்டு வருமானத்தின் முக்கிய ஆதாரமான இலங்கையின் முக்கிய சுற்றுலாத் துறைக்கு COVID-19 தொற்றுநோய் கடுமையான அடியைக் கொடுத்தது. பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரமின்மைக்கு மேலதிகமாக, ரஷ்யா – உக்ரைன் யுத்தம் மற்றும் உலகளாவிய பொருளாதார மந்தநிலை உள்ளிட்ட பல காரணிகளும் இலங்கை சுற்றுலாத்துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

**வணிகங்களுக்கான உத்திகள்**

இலங்கையில் வணிகங்கள் கடினமான சூழலை எதிர்கொள்கின்றன. ஆனால் அவைகளை மாற்றியமைத்து உயிர்வாழ எடுக்கக்கூடிய படிகள் உள்ளன:

- செலவைக் குறைப்பதில் கவனம் செலுத்துங்கள்: விநியோக (Supplier) ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்தல், செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஆற்றல் திறன் கொண்ட தொழில்நுட்பங்களில் முதலீடு செய்தல் போன்ற செலவுகளைக் குறைப்பதற்கான வழிகளை வணிகங்கள் ஆராயலாம்.

இலங்கையின் நிதி நெருக்கடியின் பின்னணியில், "செலவுக் குறைப்பில் கவனம் செலுத்துதல்", தற்போதைய பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வணிகங்களுக்கான முக்கிய உத்தியாக செலவுகளைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. வணிகங்கள் தங்கள் தினசரி செயல்பாடுகள் மற்றும் ஒட்டுமொத்த நிதித் திட்டமிடல் ஆகிய இரண்டிலும் குறைவான பணத்தைச் செலவழிப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது.

வெவ்வேறு சூழல்களில் செலவுகளைக் குறைப்பதற்கான வழிவகைகள் பின்வருமாறு:

- வணிகங்களுக்கு: இது பல்வேறு பகுதிகளில் செலவினங்களைக் குறைப்பதற்கான வழிகளைத் தீவிரமாகத் தேடுவதைக் குறிக்கின்றது. இது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்:
  - ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்தல்: விநியோக (Supplier) சப்ளையர்கள் அல்லது சேவை வழங்குநர்களுடன் சிறந்த ஒப்பந்தங்களைத் தேடுதல்.
  - நெறிப்படுத்துதல் செயல்பாடுகள்: தேவையற்ற செயல்முறைகளை நீக்குதல், வளங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.
  - செலவைச் சேமிக்கும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்தல்: செயல்பாடுகளை மேம்படுத்த ஆட்டோமேஷன், ஆற்றல் திறன் கொண்ட அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் கருவிகளை ஏற்றுக்கொள்வது.
  - மேல்நிலைச் செலவுகளைக் குறைத்தல்: வாடகை, பயணச் செலவுகள் மற்றும் பிற அத்தியாவசியமற்ற செலவுகளைக்

குறைத்தல்.

• ஒட்டுமொத்த பொருளாதார நிலைமைக்கு: இலங்கையின் பல்வேறு துறைகளில் செலவுக் குறைப்புக்கு முன்னுரிமை அளிப்பது ஒரு மேலாதிக்க உத்தியாக இருக்கலாம் என்று இது அறிவுறுத்துகின்றது. இது பின்வருவனவற்றிற்கு வழிவகுக்கும்:

◦ மெதுவான வளர்ச்சி: வணிகங்கள் முதலீடுகள் அல்லது விரிவாக்கத்திற்கு பதிலாக செலவு குறைப்பில் கவனம் செலுத்தலாம்.

◦ வேலை இழப்புகள்: குறைக்கப்பட்ட செலவினங்கள் பணிநீக்கம் அல்லது பணியமர்த்தல் முடக்கங்களுக்கு வழிவகுக்கும்.

◦ குறைக்கப்பட்ட பொதுச் சேவைகள்: அரசு நிறுவனங்கள் வரவு செலவுத் திட்டங்களை கடுமையாக்கலாம் மற்றும் சேவைகளை கட்டுப்படுத்தலாம்.

எனவே, "செலவு குறைப்பில் கவனம் செலுத்துதல்" என்பது பொருளாதார சவால்களுக்கு சாத்தியமான பதிலை எடுத்துக்காட்டுகின்றது, ஆனால் தனிப்பட்ட வணிகங்களுக்கு அப்பால் சாத்தியமான விளைவுகளையும் கொண்டுள்ளது.

• வருவாய் துறைகளை பல்வகைப்படுத்துதல்: புதிய சந்தைகள் மற்றும் தயாரிப்பு வரிசைகளை ஆராய்வது, வணிகங்கள் தங்கள் ஆபத்தை பரப்புவதற்கும், எந்தவொரு வருமான ஆதாரத்தையும் சார்ந்திருப்பதைக் குறைக்கவும் உதவும்.

• நவீன தொழில்நுட்பமயமாக்குதல்: டிஜிட்டல் கருவிகள் மற்றும் ஆட்டோமேஷனை ஏற்றுக்கொள்வது செயல்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துகின்றது.

வணிகங்கள் செலவுகளைக் குறைக்க தொழில்நுட்பத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றன என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

முகில் கணினித்தொழிநுட்பம் (Cloud computing):

• மேகக்கணிக்கு இடம்பெயர்வதன் மூலம் வன்பொருள், மென்பொருள் மற்றும் ஐவு உள்கட்டமைப்பு ஆகியவற்றில் வணிகங்களின் பணத்தைச் சேமிக்க முடியும். கிளவுட்(Cloud) அடிப்படையிலான சேவைகள் பொதுவாக நீங்கள் செல்லும்போது பணம் செலுத்தப்படுகின்றன, எனவே, வணிகங்கள் தாங்கள் பயன்படுத்துவதற்கு மட்டுமே பணம் செலுத்துகின்றன.

• எடுத்துக்காட்டாக, ஒரு சிறு வணிகமானது அதன் சொந்த கணக்கியல் மென்பொருளை வாங்குவதற்கும் பராமரிப்பதற்கும் பதிலாக கிளவுட்(Cloud) அடிப்படையிலான கணக்கியல் முறையைப் பயன்படுத்தலாம்.

ஆட்டோமேஷன்/தானியக்கமாக்குதல்:

• பணிகளை தானியக்கமாக்குவது வணிகங்களின் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும். எடுத்துக்காட்டாக, ஒரு வாடிக்கையாளர் சேவைக் குழு அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க இந்த முறைமையை பயன்படுத்தலாம், மேலும் சிக்கலான விசாரணைகளைக் கையாள மனித முகவர்களை விடுவிக்கலாம்.

• மற்றொரு உதாரணம், தானியங்கு மென்பொருளைப் பயன்படுத்தி அறிக்கைகளை உருவாக்குவது, கைமுறை தரவு உள்ளீட்டின் தேவையை நீக்குகின்றது.

**தரவு பகுப்பாய்வு:**

• வணிகங்கள் பணத்தைச் சேமிக்கக் கூடிய பகுதிகளைக் கண்டறிய தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, ஒரு சில்லறை விற்பனைக் கடை, சரக்கு நிலைகள் மற்றும் விற்பனைப் போக்குகளைக் கண்காணிக்க தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தலாம், அவை கழிவுகளைக் குறைக்கவும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும் உதவும்.

• வணிகங்கள் தங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர முயற்சிகளை மிகவும் திறம்பட இலக்காகக் கொள்ள தரவு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தலாம், இது விளம்பர செலவில் பணத்தைச் சேமிக்க கூடியதாக இருக்கும்.

**இயந்திர வழி கற்றல்:**

• முன்கணிப்பு மற்றும் முடிவெடுப்பதை மேம்படுத்த இயந்திர வழி கற்றல் பயன்படுத்தப்படலாம், இது செலவு சேமிப்புக்கு வழிவகுக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு உற்பத்தி நிறுவனம் இயந்திரக் வழி கற்றலைப் பயன்படுத்தி எப்பொழுது உபகரணங்கள் வியாபார சந்தையில் தோல்வியடையும் என்பதைக் கணிக்க முடியும், இது விலையுயர்ந்த பழுதுகளைத் தவிர்க்க அவர்களுக்கு உதவும்.

• இயந்திர வழி கற்றல் (Machine Learning) வாடிக்கையாளர் அனுபவங்களைத் தனிப்பயனாக்கப் பயன்படுகின்றது, இது வாடிக்கையாளர் திருப்தி மற்றும் விசுவாசத்தை அதிகரிக்க வழிவகுக்கும், இது வாடிக்கையாளர் கையகப்படுத்தல் செலவினங்களில் சிக்கலைக் குறைத்து வணிகங்களின் பணத்தைச் சேமிக்கும்.

**கூட்டு கருவிகள்:**

• தொடர்பு மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த ஒத்துழைப்புக் கருவிகள் வணிகங்களுக்கு உதவும், இது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும். எடுத்துக்காட்டாக, பணியாளர்கள் குழு ஒரே இடத்தில் இல்லாவிட்டாலும், ஒரு திட்டத்தில் ஒத்துழைக்க வீடியோ கான்பரன்சிங் (Video Conferencing) கருவியைப் பயன்படுத்தலாம்.

• பணியாளர்கள் தொலைதூரத்தில் தொடர்பு கொள்ளவும் ஒத்துழைக்கவும் முடியும் என்பதால், பயணச் செலவுகளைக் குறைக்க ஒத்துழைப்புக் கருவிகள் வணிகங்களுக்கு உதவும்.

வணிகங்கள் செலவுகளைக் குறைக்க தொழில்நுட்பத்தை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றன என்பதற்கான சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு, செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தக்கூடிய பல வழிகள் உள்ளன. இது செலவு சேமிப்புக்கு வழிவகுக்கும்.

தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது என்பது செலவைக் குறைப்பதற்கான ஒரு அளவு-பொருத்தமான தீர்வாகாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்தவொரு புதிய தொழில்நுட்பத்திலும் முதலீடு செய்வதற்கு முன் வணிகங்கள் தங்கள் குறிப்பிட்ட தேவைகளையும் பட்ஜெட்டையும் (Budget) கவனமாக பரிசீலிக்க வேண்டும். எவ்வாறாயினும், மூலோபாய ரீதியாகப் பயன்படுத்தப்படும் போது, தொழில்நுட்பம் வணிகங்களுக்கு பணத்தைச் சேமிப்பதற்கும் அவற்றின் அடிமட்டத்தை மேம்படுத்துவதற்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும்.

• அரசாங்க ஆதரவைப் பெற்றுக் கொள்ளல்: நெருக்கடியின் போது வணிகங்களுக்கு ஆதரவளிக்க கடன் திட்டங்கள் மற்றும் வரிச் சலுகைகள் போன்ற பல முயற்சிகளை இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

**தனிநபர்களுக்கான உத்திகள்**

இந்த சவாலான நேரத்தில் இலங்கையில் உள்ள தனிநபர்கள் தங்கள் நிதிகளை நிர்வகிக்கவும் நடவடிக்கை எடுக்கலாம்:

• பட்ஜெட்டை உருவாக்கவும்: தகவலறிந்த நிதி முடிவுகளை எடுப்பதற்கு வருமானம் மற்றும் செலவுகளைக் கண்காணிப்பது அவசியம்.

• அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்: உணவு, தங்குமிடம் மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குச் செலவிடுவதில் கவனம் செலுத்துங்கள்.

நிதி நெருக்கடியின் போது இலங்கையில் தனிநபர்களுக்கான உத்திகளின் பின்னணியில் "அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்" என்ற சொற்றொடர் உயிர்வாழ்வதற்கும் நல்வாழ்வுக்கும் மிகவும் முக்கியமான பொருட்களில் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. அத்தியாவசியமற்ற கொள்முதல்களைக் கருத்தில் கொள்வதற்கு முன், அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்ய, வரையறுக்கப்பட்ட வளங்களை கவனமாக ஒதுக்கீடு செய்வதாகும்.

தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, இலங்கையர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய அத்தியாவசிய தேவைகளின் சில பொதுவான எடுத்துக்காட்டுகள் இங்கே:

• உணவு: ஆரோக்கியம் மற்றும் ஆற்றலைப் பராமரிக்க போதுமான ஊட்டச்சத்துள்ள உணவைப் பாதுகாப்பதே முதன்மையானதாக இருக்க வேண்டும். அரிசி, பருப்பு மற்றும் காய்கறிகள் போன்ற பிரதான

(22ஆம் பக்கம் பார்க்க)

# தொழில் முனைவோர் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம்



## டாக்டர் செகெரா

நேர்கண்டவர் - கவினி

**கேள்வி:** அதிகாரம் பெற்ற நபர்களுக்கு பெண்களின் அதிகாரம் தெளிவாக பலன் அளிக்கிறது, ஆனால் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் என்ன நன்மைகள் என்று கூறுவீர்கள்?

பதில்: ஒரு மனிதன் படித்தால், ஒரு மனிதன் படித்தவன் என்று சொல்கிறார்கள் ஆனால் ஒரு பெண் படித்தால், ஒரு தலைமுறை கல்வியறிவு பெறுகிறது. இயற்கையிலேயே பெண்கள் கொடுப்பவர்கள். அவளுடைய வாழ்க்கையின் நோக்கம் அவளுடைய தனிப்பட்ட இலக்குகள் மட்டுமல்ல. ஒரு பெண்ணின் பார்வையில் குடும்பம் மற்றும் நண்பர்கள், இறுதியில் ஒட்டுமொத்த சமூகமும் அடங்கும். அதிகாரம் பெற்ற பெண் எப்பொழுதும் தனக்காக மட்டுமின்றி அனைவருக்காகவும் பேசி வழிநடத்துகிறாள். உதாரணமாக, ஒரு பெண் ஒரு நிலையில் தோல்வியுற்றால், எல்லா பெண்களும் அந்த நிலையில் தோல்வியடைகிறார்கள் என்பது பொதுவான முடிவு. ஆனால் ஒரு மனிதன் தோல்வியுற்றால், அவன் தன்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறான் என்று கருதப்படுகிறது.

ஏனென்றால், ஒரு சமூகமாக, பெண்கள் முதல் முறையாக அதைச் சரியாகப் பெற வேண்டும், சரியானவர்களாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு நாம் ஆண்கள் தோல்வியடைய அனுமதிக்கிறோம் மற்றும் தலைமைத்துவத்திற்கான வழியைக் கற்றுக்கொள்கிறோம். இருப்பினும், அதிகாரம் பெற்ற பெண்கள், அபூரண பெண்களை சரியான முறையில் ஏற்றுக்கொள்வது போன்ற பிரச்சினைகளை தீர்க்கிறார்கள். அவை சமூகத்தை பச்சாதாபமாக ஆக்குகின்றன. ஆனால் நிர்வாகத்தில் சிறந்து விளங்கும் பெண்களை வேலைக்கு அமர்த்துவதற்கான செலவு ஆண்களை எடுத்துச் செல்லும் செலவை விட அதிகம் அல்லவா? இதில் ஓரளவு கூட உண்மையாக இருந்தால் - மகப்பேறு விடுப்பை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள் - ஆண் வக்கீல்கள்/முதலாளிகளை ஈடுபடுத்தி ஊக்குவிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? மனித நேயத்தைப் பெற்றெடுக்கும் பெண்களின் இயல்பான பிரச்சினையால் பெண்களை வேலைக்கு அமர்த்துவதற்கான செலவு அதிகமாக உள்ளது. ஆண்களும் அதில் ஒரு பகுதியாக உள்ளனர், ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் முடிவுகளை எடுத்துச் செல்வதில்லை - அவருக்காகச் சுமப்பது பெண். மேலும் குழந்தை வளர்ப்பு என்பது ஒரு பெண்ணின் பொறுப்பு மட்டுமல்ல, ஆண் பெண் இருவருக்கும் சமமான பொறுப்பு உள்ளது. அதனால்தான் பல நிறுவனங்கள் இப்போது மகப்பேறு விடுப்பு மற்றும் மகப்பேறு விடுப்பு வழங்குகின்றன என்று நினைக்கிறேன். மேலும், நிறுவனம் மகப்பேறு ஊதியத்தை கூடுதல் செலவாகக் கருதினால், அவர்கள் மீண்டும் கணக்கிட்டு, சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பும் அவர் திரும்பிய பின்பும் நிறுவனத்திடம் அவரது ROI-ஐச் சரிபார்க்க வேண்டும். மற்றொரு உணரப்பட்ட செலவு பெண்களின் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஆகும். பல நிறுவனங்கள் இன்னும் தாமதமாக வேலை செய்வதை

ஒரு செலவாகக் காட்டிலும் உற்பத்தித்திறனாகப் பார்க்கின்றன என்று நான் நினைக்கிறேன். நிறுவனங்கள் துல்லியமான உற்பத்தித்திறன் கணக்கீட்டை மேற்கொண்டால், தாமதமாக வேலை செய்யும் ஆணை விட அலுவலக நேரத்தில் வேலை செய்யும் பெண்கள் அதிக உற்பத்தி மற்றும் செலவு குறைந்தவர்கள் என்பதை அவர்கள் கண்டுபிடிப்பார்கள். இந்தக் கூறப்படும் கூடுதல் செலவுகள் பல நிறுவனங்களால் சரியாகக் கணக்கிடப்படாத கட்டுக்கதைகள்.

கேள்வி: நெகிழ்வான வேலை நேரம், தொலைதூர வேலை, மகப்பேறு விடுப்பு மற்றும் வேலை-வாழ்க்கை சமநிலை போன்ற பெண்கள் எதிர்கொள்ளும் தடைகளை குறைக்க என்ன நடைமுறை நடவடிக்கைகளை நீங்கள் பரிந்துரைக்கிறீர்கள்?

பதில்: நிறுவனங்கள் தங்களால் இயன்றதை வழங்கியுள்ளன என்று நான் நினைக்கிறேன், இப்போது பலருக்கு நெகிழ்வான நேரங்கள் மற்றும் தினப்பராமரிப்பு வசதிகள் உள்ளன. பெண்கள் நாம் முதலீடு செய்ய வேண்டியது தனக்காக வாதிடுவதுதான். சம்பளம் மற்றும் பதவி உயர்வுகள் மற்றும் சவாலான பணிகளைப் பாதுகாப்பது உட்பட, தங்கள் தொழில் இலக்குகளுக்காக வாதிடுவதில் பெண்கள் மிகவும் உறுதியான மற்றும் செயலூக்கத்துடன் செயல்பட முடியும்.

கேள்வி:. ஆண்களை விட பெண்களுக்கு வேறுபட்ட கண்ணோட்டங்கள், அணுகு முறைகள் மற்றும் நடத்தைகள் உள்ளன, மேலும் இவை ஆண் தலைமையிலான அமைப்புகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் முரண்படலாம் என்ற வாதத்திற்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்?

பதில்: பெண்களைத் தடுத்து நிறுத்தும் இந்தத் தடைகளைத் தகர்ப்பது எப்படி? முதலில் பெண்கள் தாங்கள் ஆண்களுடன் போட்டியிடவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும், மாறாக முடிவுகளுக்காக போட்டியிட வேண்டும். பெண்களுக்கான சாக்குப்போக்குகளைக் கூறாமல், ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளில் எப்படி பேச்சுவார்த்தை நடத்துவது மற்றும் தங்களை இணைத்துக் கொள்வது என்பதில் பெண்கள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் வழிநடத்த வேண்டும் என்றால், ஒரு பெண்ணாகவோ அல்லது ஆணாகவோ அல்ல, ஒரு தலைவராக சிந்திக்க வேண்டும். தலைமைக்கு பாலினம் இல்லை - நாம் எப்படி வழி நடத்துகிறோம் என்பதே நமது பாலினக் கண்ணோட்டத்தைக் காட்டுகிறது. சிறந்த வழி, செவிமடுப்பதும், ஏற்றுக்கொள்வதும், பின்னர் உங்கள் சொந்த வழியில் செல்லுபடியாகும். அதனால் அவர்கள் பெண்கள் முன்னணியில் பழகி அது ஒரு கலாச்சாரமாக மாறும்.

கேள்வி: பாலின பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை அமைப்புகளை எவ்வாறு அகற்ற வேண்டும் என்று நீங்கள் முன்மொழிகிறீர்கள்?

பதில்: இது போர்டுரூம்களில் இருந்து தொடங்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், பின்னர் பணிபுரியும் ஊழியர்கள் / நீல காலர் பணியாளர்கள். கலாச்சாரங்கள் தலைவர்களால் கட்டமைக்கப்படுகின்றன. கொள்கைகள் அனைத்து மட்டங்களிலும் உள்ள தலைவர்களால் செயல்படுத்தப்பட்டால், ஊழியர்கள் தானாகவே அவற்றைப் பின்பற்றுவார்கள். குழு உறுப்பினர்கள் தங்கள் ஊழியர்களிடம் பேசுவதற்கு முன் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்வி: மாற்றத்தை எதிர்க்கும் அல்லது மெதுவாக முன்னேறும் அரசாங்கங்களுடன் நேரடியாகப் பணியாற்றுவதற்கான மிகச் சிறந்த வழி எது என்று நீங்கள் கண்டறிந்துள்ளீர்கள்?

பதில்: சாக்குப்போக்கு சொல்பவர்களை விட, மாற்றத்தை விரும்பும் அதிகாரிகளுடன் பணிபுரிதல். மேலும் எங்களைப் போல் அரசுத் துறை அதிகாரிகளை வழி நடத்தும் முயற்சியை தனியார் துறை நிறுத்த வேண்டும். அவர்களின் கலாச்சாரத்தை நாம் மதித்து ஏற்றுக்கொள்ளத் தொடங்கும் தருணத்தில், மாற்றத்தைச் செயல்படுத்துவதும் உற்பத்தி முடிவுகளைப் பெறுவதும் எளிதாக இருக்கும். இப்போது, பொது ஆளுமைக்கு பின்னால் இருக்கும் பெண்ணைப் பற்றி இன்னும் கொஞ்சம் பேசலாம்.

கேள்வி: ஒரு பெண் தலைவராக, உங்கள் வாழ்க்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க தடையாக இருந்தது எது?

பதில்: பாலினம் தொடர்பான சாலைத் தடைகளால் நீங்கள் நிச்சயமாக வெளியேற்றப்பட்டிருக்கிறீர்களா? எனக்கு சில அனுபவங்கள் உண்டு. ஒரு முறை, திருமணமாகாத இளம்பெண்ணாக, ஒரு வேலை நேர்காணலில் நான் மூன்று வருடங்கள் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் அல்லது கர்ப்பமாக இருக்க மாட்டேன் என்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி என்னிடம் கேட்கப்பட்டது. மனித உரிமையை கட்டுப்படுத்தும் ஆவணத்தில் கையெழுத்திட வேண்டாம் என்று என் தந்தை கூறினார். பிறகு, நான் ஒரு முன்னணி லாப நோக்கற்ற நிறுவனத்தில் ஒரு ஜென்டில்மேனிடம் ஒரு தொழில்முறை பயிற்சி வகுப்பை நடத்திக் கொண்டிருந்தபோது, பெண் மனிதவளத் தலைவர் (அவர் இப்போது ஒரு முன்னணி நிறுவனத்தில் மனிதவளத் துறையின் இயக்குநராக இருக்கிறார்) வெளியே வந்து, என் கண் பார்வையை அகற்றும்படி என்னிடம் கேட்டார். நான் அதிக கவனத்தை ஈர்த்தேன். அந்த நேரத்தில் நான் இதை கேள்வி கேட்கவில்லை, நான் ஒப்புக்கொண்டேன். காலப்போக்கில், பெண்கள் கேட்பதை விரும்புகிறார்கள், ஆனால் கேள்வி கேட்கவோ பேசவோ விரும்புவதில்லை என்பதை நான் உணர்ந்தேன். நான் அதற்கு நேர்மாறாக செய்ய ஆரம்பித்துவிட்டேன், விருப்பமுள்ளவர்கள் இருக்க முடியும், இல்லாதவர்கள் வெளியேறி கதவை மூடிக் கொள்ளலாம்.

கேள்வி: ஒரு பெண்ணாக ஒரு தொழிலை உருவாக்க உங்களுக்கு எது மிகவும் உதவியது என்று நினைக்கிறீர்கள்?

பதில்: நீங்கள் வெற்றிபெற உதவிய மிகப்பெரிய காரணி எது? அறிவு மற்றும் உலகத்துடன் புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதில் எனது ஆர்வம் என்று நான் நினைக்கிறேன். நான் கற்றுக்கொள்ளவும் என்னை நானே சவால் செய்யவும் விரும்புகிறேன்.

கேள்வி: நடைமுறையில் உங்களையும் உங்களைச் சுற்றியுள்ள பெண்களையும் எவ்வாறு மேம்படுத்துவது?

எனக்கு அதிகாரம் அளிக்கும் மூன்று விஷயங்கள் மட்டுமே என்னிடம் உள்ளன. இந்தக் கட்டளைகள்தான் நான் என் நாளை ஆரம்பித்து முடிக்கிறேன், கண்ணாடி முன் ஒவ்வொன்றையும் நினைவூட்டுகிறேன். முதலாவதாக, நான் ஏன் வாழ்கிறேன் என்பதை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் - என் இரண்டு குழந்தைகள் தான் காரணம். இரண்டாவதாக, நான் யார், இன்று நான் யார் - கடவுள் எனக்கு மிகவும் நல்லவராக இருந்தார், இப்போது என்னால் என்னை விட்டுக் கொடுக்க முடியாது. மூன்றாவதாக, எனது நிகழ்ச்சிகளின் போது நான் சந்திக்கும் பெண்கள் எனக்கு நம்பிக்கையைத் தருகிறார்கள் - அவர்களின் பிரச்சினைகளும் அவர்களின் புன்னகையும் நான் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பதையும், அவர்களுக்காக நான் இருக்க வேண்டும் என்பதையும் புரிய வைக்கிறது. இது பெண்களுக்கான பொறுப்பு போன்றது. 15. உங்களை வலிமையான பெண்ணாக மாற்றுவது எது? எது உங்களை நிறை வேற்றுகிறது? நான் வலுவாக இருப்பதாக நான் நினைக்கவில்லை, ஆனால் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், அது என்னை ஓரளவு வலிமையாக்குகிறது. நான் வழி காட்டியாக இருந்த ஒரு பெண் வெற்றிபெற்று, அவளுடைய ஹீரோவாக மாறும்போது நான் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன்.

இறுதியாக, நீங்கள் எங்களுக்காக இந்த வாக்கியத்தை நிறைவு செய்வீர்களா?

வெற்றிகரமாக இருப்பதை விட மகிழ்ச்சியாக இருப்பது மிகவும் முக்கியமானது, ஏனென்றால்" ஒவ்வொரு மகிழ்ச்சியான நபரும் வெற்றிகரமானவர்.



# எங்கே தேடுவது?

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“நாட்டில் கட்டுப்பாடுகளும் தடைகளும் அதிகரிக்கும் போது மக்கள் மேலும் மேலும் ஏழைகள் ஆகிறார்கள். மக்களிடம் கூரிய ஆயுதங்கள் புழங்கும்போது நாட்டில் குழப் பங்கள் தலைவிரித்தாடுகின்றன. மக்க ளிடம் கலையும் கைவினையும் அதிகரித் தால் அந்த அளவுக்கு விநோதப் பொருட்கள் உருவாகின்றன. நாட்டில் சட்டதிட்டங்கள் அதிகரிக்கையில் கொள்ளையர்களும் திருடர்களும் பெருகுகிறார்கள்.” நித்தி யானந்தனின் ‘பெருநதியின் பேரோசை’ யில் படித்தது.

இன்றைய சூழலில் நடப்பவற்றை பார்த்தால் இதன் உண்மைத்தன்மை உறைக்கிறது. பொருளாதாரம் மக்கிப் போய் விட்டதாக ஒரு போரொலி காதில் அறைகிறது. ஒரு காலத்திலும் இல்லாத வாறு கத்தரிக்காய் ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையாகிறது. கரட் இரண்டாயிரம் ரூபா. காய்கறிச் சந்தையில் இந்த விலை யில் பொருட்களை வைத்திருப்பவருக்கு அவை விற்காமல் இரண்டு நாட்கள் பட்ட றையில் கிடந்தால் அவரது நிலை என்ன?

முட்டையை அறுபத்தைந்து ரூபாவுக்கு அடிபட்டு வாங்க மக்கள் மோதுகிறார்கள். இன்றைய மலிவான கறி அது மட்டும் தான் என நினைக்கிறேன். ஆயினும் என்ன மக்கள் மீனையும் இறைச்சியை யும் சாப்பிடுமளவுக்கு அவர்களிடம் உழைப்போ பணமோ இல்லை. உற்பத் தியாளர்கள் கண்களை மூடிக்கொண்டு தமது எதிர்காலம் பற்றி சிந்திக்க ஆரம் பித்துள்ளனர்.

நட்டமே வராமல் ஒரு தொழிலை செய்ய வேண்டுமானால் அது அன்றாடம் கூலிக்குப் போவதுதான். அந்த வேலை யில் மட்டும் முதலீடு கிடையாது. தேகம் நன்றாக இருந்தால் போதும். மூளையை கசக்கி இதில் லாபம் வருமா நட்டம் வருமா என்றெல்லாம் பயப்படத்தேவையில்லை. இயற்கை அனர்த்தம் வந்து விடுமா

இருப்பதை இழந்து விடுவோமா என்றெல்லாம் அஞ்சத் தேவையில்லை. என்ன பணத்தையோ பெரும் தொழிலுக்கோ சொந்தமாகவோ இருப்பதால் அவர் என்ன பயனைப் பெறுகிறாரோ அதே அளவு பயனை இவரும் பெறுகிறார். அவ்வளவு தான்.

மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு வர பெருமழைதான் காரணம். நீர்தேங்கி கன்றுகள் அழுகிப்போயின. மீனும் அடிக்கடி கடலடிக்கிறது என்பதால் குறைந்தது. வேட்டைப்பொருட்கள் நெடுநாட்களாகவே இலங்கை மக்களுக்கு தடை. இருக்கிற கொஞ்சசக் காடுகளிலும் இராணுவம் குடியேறியுள்ளது. சும்மா சொல்லக்கூடாது அவர்களது அறுவடையாக சோளன் சந்தைக்கு வருகிறது.. விலைதான் மலை போல.

புதுநெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. போன வாரம்வரை நெல் எழாயிரத்து ஐநூறுதான். இன்றைய விலை ஐயாயிரத்து ஐநூறு. பச்சை நெல் வயலிலிருந்து வீட்டுக்கு வராமலே விற்பனை. இதுதான் உற்பத்தியாளனின் நிலை அறுவடை வரும் போது இறக்குமதியை அதிகரிக்கும் அரசாங்கம். அதனால் ஒரு இலக்கை வைத்து பாடுபட்ட விவசாயி மீண்டும் மீண்டும் வறுமையில் உழல்கிறான்.

தமிழர்களின் நிலை என்று தனியே பார்க்க எதுவுமில்லை. உலகம் முழுமைக்குமான இயற்கையின் அசாத்திய கோபம் இப்போது வெளிவருகிறது. தானாக வந்த எதையும் நாமாக மாற்றாதவரை நலமாக வாழ்ந்தோம் என எமது மூதாதையர் சொல்வதும் பொய்தான் மனிதர்கள் தமக்கு தமக்கென சொத்துகளையும் சொந்தங்களையும் உருவாக்க ஆரம்பித்த போதே அவர்கள் வானத்தையும் பூமியையும், கடலையும் நதியையும் காற்றையுங்கூட சொந்தமாக்க பாடாத பாடு பட்டு வருகிறார்கள். உலகம் முழுதும் இதற்காகவே போராட்டங்களையும் வடிவமைத்துக் கொண்டு மக்களை மேலும் துன்புறுத்தி அலைய வைக்கிறார்கள்.

போர் நடந்த காலத்தில் நமது விவசாய உற்பத்திகளை விற்கவே முடியாதபடிக்கு கஸ்டப்பட்டோம். மரக்கறிகளை செய்கை பண்ணி அவை பலன்தரும் நேரமாக தோட்டங்களையே கைவிட்டுவிட்டு உயிரைக் கொண்டு ஓடியிருக்கிறோம். மாமரங்கள் பழுத்துச் சொரிந்து கொண்டிருக்க அவற்றை கைவிட்டுவிட்டு நாம் காடுகளுள் புகுந்து கரம்பைக்காய்களை பசிக்குணவாக்கியிருக்கிறோம். அந்தக் காலத்தை நினைத்தால் மீண்டும் அப்படி ஒருகாலம் வரவே கூடாது என்று தெய்வங்களிடம் இறைஞ்சுவோம். ஆனால் இன்றைய காலம் அதற்கும் ஒருபடி மேலே எங்களை கொண்டு செல்கிறது. என்ன தான் சிறு அளவில் தோட்டம் போடலாம் என்றாலும் அதற்கும் நிலம் இல்லாதவர்கள் என்ன செய்யலாம்.

நிழலிலும் பயிர் செய்யலாம் என்கிறார்கள் தென்னைமரங்களையும் பழமரங்களையும் வளர விட்டு விட்டு நிழலில் பயிரிட எதுவுமில்லை என்கிறார் என் பக்கத்து வீட்டுவாசி. நியாயம்தானே அவரால் தேங்காய்களை விற்று அதற்கு மாற்றீடாக வேறு பொருட்களை வாங்கலாமே என ஆலோசனை சொன்னால் சிரிக்கிறார். அது எப்படி எனது தேங்காயை கிலோ தொண்ணூறு ரூபாவுக்கு கேட்கிறார்கள் அவர்களுடைய பொருளுக்குமட்டும் இறக்குமதி சரக்கு என்று விலை அதிகமாக சொல்கிறார்கள். நான் எல்லாவற்றையும் கொப்பறா போட்டு எண்ணையாக்குவேன் என்றார். அவர்களுடைய பொருளுக்கு மட்டும் அதிகமாக விலை சொல்கிறார்கள். இன்றைய கிளிநோச்சியின் தேங்காய் நெய்யின் விலை வெறும் ஐநூற்று நாற்பது ரூபாதான் அப்படியும் அவருக்கு நட்டம்தான்.

கொஞ்சக்காலம் முன்புவரை தென்னை மரம் வளர்த்தவர்களுக்கு உபரி வருமானங்கள் இருந்தது. தேங்காய் உரிமட்டை சிரட்டை என்பவற்றை வாகனங்களிலி தேடித்தேடி கொள்வனவு செய்தார்கள். ஆனால். இப்போது அவற்றை யாரும் தேடுவாரில்லை அந்தப்பொருட்களை ஏதோ ஒரு கம்பனி ஏற்றுமதி செய்ததுதானே சிரட்டைகளையும் கொள்வனவு செய்து எரி பொருளுக்காக கொண்டு சென்றார்கள். இப்போது அந்த கம்பனிகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன என கேள்விப்படுகிறேன். போகட்டும் நாம் தேங்காய் நாரை ஏற்றுமதி செய்யாது போனாலும் அவற்றை நிலத்தில் மல்லாக்காப் போட்டு தாட்டு வைத்து ஆறுமாதம் கடநது பார்த்தால் அருமையான இயற்கைப்பசளையாக அது மாறியிருக்கிறது. அது போகட்டும் பொருளாதாரம் கஸ்ட நிலையில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே எமது இருக்கிற வளங்களை புதைத்து வைப்பது சரியா?

மிக அதிசயமாக நான் என் மகனுக்கு சொன்ன பொங்கல் செய்தி. “கிளிநொச்சியில் ஒரு பிடி சாணம் கிடைக்கவில்லை. நான் புத்துமண் வெட்டி ஊறவைத்து முற்றம் மெழுகினேன். நான் நட்டு வைத்த மஞ்சள் விளைந்து கிடந்தது. அதன் கிழங்கை நேக அரைத்து பிள்ளையார் பிடித்தேன். அவன் ஆச்சரியப்பட்டான். கிளிநொச்சியில் மாடில்லையா? ஏன்று இருக்கிறது. மகனே எல்லாம் கட்டாக்காலிகளாகி தமது மேச்சற்றரவைகளை இழந்து தொலை தூரம் மேயப்போய்விட்டன.. என்றேன்.

அண்மையில் வெளியான தமிழ்செல்வனின் “நஞ்சாகும் நிலம்” குறிப்பிடுவது போல அது மனிதர்களுக்கே மனிதர்கள் வெட்டிய புதைகுழி. மேச்சற்றரவைகள் வனங்கள் மண்ஆகழ்வு போன்ற ஏராளமான செய்கைகள் பற்றிப் பேசும் அந்த நூல் தமிழர்களின் அறியாமையை வெளிச்சம் போட்டு காட்டிநிற்கிறது. நமது பொருளாதாரத்தை எங்கே தேடுவது. ஆற்றிலே போட்டுவிட்டு குளத்திலா? இப்படியே போனால் மக்களை காப்பாற்ற என்ன வழி.

**முட்டையை அறுபத்தைந்து ரூபாவுக்கு அடிபட்டு வாங்க மக்கள் மோதுகிறார்கள். இன்றைய மலிவான கறி அது மட்டும்தான் என நினைக்கிறேன். ஆயினும் என்ன மக்கள் மீனையும் இறைச்சியையும் சாப்பிடுமளவுக்கு அவர்களிடம் உழைப்போ பணமோ இல்லை.**

# கால்நடை மற்றும் கோழிகளுக்கு குறைந்த செலவில் அசோலா வளர்ப்பு செய்யும் முறை



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



பெரணி வகையைச் சேர்ந்த நுண் தாவரம் அசோலா. கறவை மாடுகளுக்குச் சிறந்த தீவனம். பசுக்களுக்குத் தினமும் இதைக் கொடுத்துவந்தால், 2 லிட்டர் கூடுதல் பால் கிடைக்கும் என்கின்றனர் கால்நடை வளர்ப்பு ஆர்வலர்கள்.

அசோலாவைக் கால்நடைகள் ருசித்து உண்ணும். உடல் ஆரோக்கியத்துக்குத் தேவைப்படும் அமினோ அமிலங்கள், உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் தாதுக்களான கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச்சத்து, துத்தநாகம், மாங்கனீஸ், வைட்டமின்கள் போன்றவற்றையும் உள்ளடக்கிய அற்புதச் சக்தி படைத்தது அசோலா. அது மட்டுமல்லாமல் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, புரதச்சத்து நிறைந்தது. அசோலாவைக் கறவை மாடுகளுக்குக் கொடுக்கும்போது, ஏறத்தாழ இரண்டு லிட்டர்வரை கூடுதலாகப் பால் பெற முடியும்.

கறவை மாடுகள் மட்டுமின்றி முயல், பன்றி, வெள்ளாடு, செம்மறி ஆடு, கோழி, மீன் போன்றவையும் விரும்பி சாப்பிட்டால், எடை கூடும். கோழிகளுக்கு அசோலா கொடுக்கும்போது முட்டையிடுவது அதிகரித்து, உடல் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவும். அசோலாவை முதன்முதலில் கறவை மாடுகளுக்குக் கொடுக்கும்போது தினம் 100 முதல் 200 கிராம் என்ற அளவில் ஆரம்பித்து, படிப்படியாக 1 முதல் 1½ கிலோ வரை கொடுக்கலாம். சூஅசோலா ுவளர்ப்பது ுஎப்படி? முதலில் 6 அடி நீளமும், 4 அடி அகலமும் ஒன்று முதல் 1½ அடி வரை ஆழமும் கொண்ட குழிகளை வெட்டிக்கொள்ள வேண்டும். அதனுள் தடிப்பான பிளாஸ்டிக் பேப்பர், தார்ப்பாயை விரித்துக் கொள்ள வேண்டும். முதலில் அரை அடி உயரத்துக்குச்செம்மண் கலந்த தோட்டத்து மண்ணைப் போட வேண்டும்.

நாட்டுப் பசுஞ் சாணம் 3 கிலோவரை, வேப்பம் புண்ணாக்கு 50 முதல் 100 கிராம்வரை போட்டு, சுமார் ½ அடி தண்ணீர் இருக்குமாறு விட வேண்டும். தண்ணீர், மண், சாணம், புண்ணாக்கு ஆகியவற்றைச் சிறிது நேரம் கிளறிவிட வேண்டும். அதன்பின் சுமார் – முதல் 1 கிலோ வரை அசோலா விதைகளைத் தூவ வேண்டும். 10 முதல் 15 தினங்களில் தொட்டி முழுவதும் அசோலா வளர்ந்துவிடும்.

இதிலிருந்து தினமும் – கிலோ தொடர்ந்து எடுத்துக்கொள்ளலாம். கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அசோலா படுக்கைக் குழிகளைத் தயார் செய்துகொள்ளலாம். வாரம் ஒரு முறை ஒரு கிலோ நாட்டுப் பசுஞ்சாணம், போட வேண்டும். ஒவ்வொரு மாத முடிவிலும் தொட்டியில் உள்ள மண்ணில் பகுதியை எடுத்துவிட்டு புதிதாக தோட்டம் மண் அதற்கு ஈடாக விடவேண்டும். தண்ணீரின் அளவு 7 முதல் 10 செ.மீ. இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். 10 – 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீரைப் பாதி அளவுக்கு வெளியேற்றிப் புது நீரை மாற்ற வேண்டும்.

6 மாதங்களுக்கு இதிலிருந்து தினமும் அசோலா அறுவடை செய்யலாம். அதிவேகமாக வளரும் தன்மை கொண்ட காரணத்



தால், தினமும் அசோலாவை எடுத்துக் கொண்டு புதிதாக வளர்வதற்கு இட வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எந்த நிலையிலும் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போக விட்டுவிடக் கூடாது. நேரடி வெய்யில் பிடிக்கா வண்ணம் பார்க்க வேண்டும் வலை அமைத்தலும் நல் முறையாகும்.

**அதிகசெலவுபிடிக்குமா?**

அசோலா வளர்ப்பது சுலபமானது மட்டு மல்ல, கால்நடைகளின் தீவனத் தேவை யைப் பூர்த்திசெய்வதுடன், அடர் தீவனத் துக்குச் செய்யும் செலவும் குறைய வாய்ப் புள்ளது.

கறவை மாடுகளுக்குக் கொடுக்கிற அடர் தீவனமான பருத்திக்கொட்டை, தவிடு, புண்ணாக்கு போன்றவற்றைப் பாதியாகவோ அல்லது மூன்றில் ஒரு பங்காகவோ குறைத்துக் கொள்ளலாம். அசோலா உற்பத்தி செய்ய 1 கிலோவுக்கு 2 ரூபாய்க்கும் குறைவாகவே செலவாகும். 25 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நன்கு செழித்து வளரும். கடுமையான பகல் நேர வெயில் நேரடியாகப் படும் வகை யில், அசோலா வளர்ப்புக் குழிகளை அமைக்கக் கூடாது. பகல் நேர வெயில் படாத வகையில், மேலே பச்சை துணி கட்டி நிழல் படுமாறு அமைக்க வேண்டும். அல்லது தொட்டிகளை மரத்திற்கு கீழே அமைக்கவேண்டும்.

காலை, மாலை நேரச் சூரியனின் இளம் வெயில் அசோலாவுக்கு மிக மிக நல்லது. அசோலாவைக் கால்நடைகளுக் கும். கோழிகளிற்கும் கொடுக்கும் முன்பு, நான்கைந்து முறை தண்ணீரில் அலசிக் கொடுக்க வேண்டும். அசோலாவில் சாணத் தின் மணம் இருந்தால், கால்நடைகள் உண்ணாமல் போய்விடக்கூடும்.

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரில் அலசும் போது வரும் சிறிய செடிகளை, மீண்டும் அசோலா வளர்ப்பு தொட்டியிலேயே விட்டு விட வேண்டும். கால்நடைகள் அசோலாவை சுலபமாக ஜீரணித்துக்கொள்ளும். அடர் தீவனத்துடன் கலந்தும் தனியாகவும் பசுந் தீவனத்துடன் கலந்தும் கொடுக்கலாம்.

அசோலா விதைகளை நெல் நாற்று வயல் களில் தூவிவிட்டால், வயலில் தண்ணீர் தேங்கி இருக்கும்போது நன்கு செழித்து வளரும்.

தண்ணீர் இல்லாமல் வற்றிப்போகும் போது, அசோலா மக்கி உரமாகிப் பயிருக்கு ஊட்டம் கொடுக்கும். அதன் மூலம் உரச் செலவைக் குறைக்கலாம். புதிய அசோலா விதைகளை 5 - 6 மாதங்களுக்கு ஒருமுறை போட வேண்டும். அப்படிப் போடும் முன்பு தண்ணீரில் உள்ள இலை, தழை குப் பைகளை அகற்றிவிட வேண்டும்.

**நாட்டுப் பசுஞ் சாணம் 3 கிலோவரை, வேப்பம் புண்ணாக்கு 50 முதல் 100 கிராம்வரை போட்டு, சுமார் - அடி தண்ணீர் இருக்குமாறு விட வேண்டும். தண்ணீர், மண், சாணம், புண்ணாக்கு ஆகியவற்றைச் சிறிது நேரம் கிளறிவிட வேண்டும். அதன்பின் சுமார் - முதல் 1 கிலோ வரை அசோலா விதைகளைத் தூவ வேண்டும். 10 முதல் 15 தினங்களில் தொட்டி முழுவதும் அசோலா வளர்ந்துவிடும்.**



**எப்பிடியும் எங்களுக்கு அடுத்த தலைமுறை மண்ணில இறங்கி நடக்கிறதே சாதனை எண்ட நிலையில இருக்கும்... இப்படியான சின்ன சின்ன சந்தோசங்களை கதையில கூட படிக்க ஏலாதவாங்களா கொம்பியூட்டர் கேம் விளையாடுறங் களாத்தான் இருக்கபோறாங்க எண்டதுதான் கவலை.**





கிடைக்கல.... சரி வீட்ட போன் பண்ணி எப்பிடி மட்டி புறக்கிற எண்டு தாத்தாக்கு போண் பண்ணினா அம்மா தான் எடுத்தா... மட்டி இருக்குற கடல் எண்டா சேறு இருக்கும் சுழிவரும் வீட்ட வா எண்டு வழமையான உபதேசம்!! ஒண்ணும் வேலைக்காவாது.. திட்டத்தினை கைவிடவும் மனமில்லை... 2016 ஏ முழுமை இல்லாமல் போகும் எண்ட மனக்கலக்கமா இருந்த...

சரி யாராது ஊர்க்காரர் கூட்டிக்கொண்டு வந்து உதவி கேப்பம்... ஒரு பெரியவர் வந்தார்... தம்பி நீங்கள் கரையில நில்லுங்க.. நான் புறக்கித்தாறன் எண்டார்... நாங்க இறங்கி வேலை செய்யம் எண்டு அவர் எதிர்பார்க்கல... அவரின்ர அந்தக் கூற்று நகர வாழ்க்கை வாழும் எமக்கு ஒரு குத்தலாக இருந்தது... உண்மைதான் நாங்க இயற்கையிலிருந்து தொலைதூரம் சென்றுதான் விட்டோம்.

அந்த ஐயா தன்ர 14 வயதில இருந்து மட்டி புறக்கிறாராம்.. நான் மேல சொன்ன மட்டி பற்றிய சிறுகுறிப்பு அவர் சொன்னதில எனக்கு ஞாபகம் இருந்ததுகள் தான்.

அவர் சொன்னதும் சரிதான்... எங்களால அவரின்ர வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியேல்ல... அந்த சேத்துக் கடலுக்க எப்பிடியும் 2கிலோ மீற்றர் உள்ள போகோணும்.. அப்பதான் மட்டி புறக்கலாம்... முழங்காலுக்கு மேல தண்ணி வராது. சரி நாங்களும் மட்டி புறக்கினம்.. சொல்லப்போனா மட்டி புறக்கிற ஒண்ணும் அவளவு பெரிய வேலை இல்லைத்தான்... சேத்துக்குள்ள காலால அமத்திப்பார்த்தே பிடிச்சிரலாம்.... என்னால் இப்ப எங்க போனாலும் மட்டி புறக்க முடியும்...

எப்பிடியும் எங்களுக்கு அடுத்த தலைமுறை மண்ணில இறங்கி நடக்கிறதே சாதனை எண்ட நிலையில இருக்கும்... இப்படியான சின்ன சின்ன சந்தோசங்களை கதையில கூட படிக்க ஏலாதவாங்களா கொம்பியூட்டர் கேம் விளையாடுறங்களாத்தான் இருக்கபோறாங்க எண்டதுதான் கவலை...

நாங்க எப்பிடியும் 2 பை நிறைய புறக்கியிருப்பம்.... அந்த ஐயா எங்க ரெண்டு பேரை விட கூட புறக்கினவர்.. அப்பிடியே கரைக்கு வர தம்பி ஐயனார் கேவிலுக்கு முன்னால இருக்கிற கேணில காலைக் கழுவுங்க எண்டார்.. என்ன எண்டு தெரியல அந்த ஊர் ஐயானார் கோவில் மட்டும் ஒருத்தரின்ர கண்ணிலயும் படல போல.. பழைய சிதைவுகளுடனே இருக்கு.... வன்னி பாதை திறந்ததும் முதலில கோவில் கட்டி கும்பாபிசேகம் பண்ணி ஆக்கள் தானே நாங்கள். சரி அதை விடுவம்.


தம்பி போகேக்க வீட்ட வாங்க புளுக் கொடியல் இருக்கு கொண்டுபோங்க எண்ட வார்த்தை.... ஒரு மணி நேர உறவில் கலந்திருந்த உண்மை அன்பையும், தம்பியும் அவர்ட பிரண்சும் ஒரே வீட்டு வாசலில நிண்டு சத்தமாக் கதைக்கினம் எண்டு அப்பாவ கூப்பிட்டு கோள் மூட்டின பெயர் தெரியாத பக்கத்து வீட்டு அங்கிளும் தான் மனசில வந்து போனார்கள்..

ஐயாவிடம் விடைபெற்று புதிய அனுபவப் பகிர்வுடன் எமது பயணம் முடியும் நேரம், இரண்டு சிறு குழந்தைகள் சந்தில நிண்ட ஐஸ்கிறீம் வானை நோக்கி சந்தோசமாக ஓடி வந்தனர்... அப்பதான் விளங்கிச்சு நாங்க குருதட்சணையா ஐயாவிற்கு கொடுத்த காசுதான் அவற்ற பேரப்பிள்ளைகளான சின்ன பிள்ளைகளின்ர சந்தோசத்திற்கு காரணம் எண்டு..

அப்பிடி இருக்கேக்க எங்கிட முதலீடுகளில இருந்து எங்கள் கொள்வனவுகள் வரை எம்மவருக்கே முதலிடம் கொடுக்கையில் எம்மண்ணும் எம்மக்களும் செழுமை அடையும் தானே...

# AI பணிகளைப் பறித்தாலும் புதிய வாய்ப்புகள் பெருகும்



செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தனது சித்து வேலையை மெல்ல மெல்ல வெளிக்காட்டி வருகிறது. மனிதர்களின்கட்டளைக்கு இணங்க சில டாஸ்குகளை கச்சிதமாக இப்போது செய்து வந்தாலும் அது சுயமாக / தன்னிச்சையாக சிந்திக்க தொடங்கினால் என்ன ஆகும் என்ற அச்சம் ஒவ்வொருக்குள்ளும் இருக்கத்தான் செய்கிறது.

இத்தகைய சூழலில் Zoom வீடியோ கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் பொறியியல் பிரிவின் தலைவரும், தமிழருமான வேல்சாமி சங்கரலிங்கம் அது குறித்து நம்மிடம் விவரித்துள்ளார்.

ஞுழுழஅ நிறுவனம் உலகம் முழுவதும் பிரபலமாக அறியப்படும் டெக் நிறுவனங்களில் ஒன்று. குறிப்பாக ஒருவருக்கு ஒருவர், ஒருவருக்கு பலர் என வீடியோ அழைப்பு மேற்கொள்ளும் வசதியை தனது பயனர்களுக்கு இந்நிறுவனம் வழங்கி வருகிறது. கட்டண சந்தா மற்றும் கட்டனமில்லாமலும் பயனர்களுக்கு சேவை வழங்கி வருகிறது. ஏஜ அம்சங்களை உள்ளடக்கிய வகையில் இதன் செயல்பாடு உள்ளது குறிப்பிடத்தக்கது. ஏஜ குறித்து வேல்சாமி சங்கரலிங்கம் தொடர்கிறார்.

“எனது கல்லூரி நாட்களிலிருந்தே ஏஜ பயன்பாடு இருந்து வருகிறது. அண்மைய மாற்றங்கள் என்னவென்றால் ஜெனரேட்டிவ் ஏஜ-க்கு கிடைத்துள்ள அதிகளவிலான தரவுகள் தான். அந்த வகையில் பார்த்தால் இன்டர்நெட், சமூக வலைதளம் என அதிகப்படியான தரவுகள் திரட்டப்பட்டுள்ளது.

மறுபக்கம் பார்த்தால் ஜிபியு வளர்ச்சி கண்டுள்ளது. இந்த இரண்டு ட்ரெண்டும் அவசர காலங்களில் சவால்களை எதிர்கொள்ள உதவும். ஆரம்ப காலங்களில் இன்டர்நெட் பயன்பாட்டில் இருந்தது. பிரவுசர் பயன்பாட்டுக்கு வந்த பிறகு தான் இன்டர்நெட் குறித்த புரிதல் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைத்தது. இப்போது ஏஜ பயன்பாட்டில் நாம் அந்த தருணத்தில் இருக்கிறோம்.

ஜெனரேட்டிவ் ஏஜ பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில் Zoom நிறுவனம் அதனை உரிய முறையில் பயன்படுத்தி வருகிறது. விர்ச்சுவல் ஸ்க்ரீன், ஆடியோ சார்ந்து எழும் நாய்ஸ்களை நீக்குவது, மீட்டிங் சார்ந்து சுருக்க உரையை பெறுவது, மீட்டிங்கில் தாமதமாக இணைந்தவர் தவற விட்ட விஷயங்களை பட்டியலிடுவது என பல்வேறு வகையில் ஏஜ அம்சத்தை பயன்படுத்தி வருகிறோம். வரும் நாட்களில் இந்த வகை பயன்பாடு அனைத்து தளங்களிலும் பரவலாகும்.

மனிதர்களின் வேலையை ஏஜ பறிக்



குமா? கம்ப்யூட்டர் பயன்பாட்டுக்கு வந்த போது மனிதர்கள் மேற்கொண்டு வரும் வேலையை பறித்து விடும் அல்லது மாற்றாக இருக்கும் என சொல்லப்பட்டது. எனது பார்வையில் இது தொழில்நுட்ப பரிணாமத்தின் ஒரு பகுதி தான். அதற்கு தகுந்த வகையில் நாம் நமது திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கால்குலேட்டர் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்பு கணக்குகளை நாம் தான் மேற்கொண்டோம். அதன் வரவுக்கு பின்னர் பெரிய கணக்குகளை மேற்கொள்ளும் முறை மாற்றம் கண்டது.

எப்போதுமே இது மாதிரியான மாற்றங்கள் நிகழும் போது அது சார்ந்த வாய்ப்புகளும் உருவாகும். அதை மறுப்பதற்கு இல்லை. அதே நேரத்தில் ஏஜ பயன்பாடு அனைத்து துறைகளிலும் இருக்கும். அந்த மாற்றம் வேகமாகவும் நடக்கும். ஏஜ நுட்பம் எந்த அளவுக்கு பணி வாய்ப்புகளை பறிக்கிறதோ, அதற்கு மேலாக பணி வாய்ப்புகளை உருவாகும். அதற்கு தகுந்த வகையில் நாம் நமது திறனை மேம்படுத்தி கொள்ள வேண்டும்.

ஏஜ சார்ந்த சட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் டெக் துறை சார்ந்த நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியம். அப்போதுதான் அதன் பயன்பாடு சரியான பாதையில் இருக்கும். இதில் அரசாங்கத்தின் பங்கு இரண்டாம் இடம் தான். ஏனெனில் அரசின்



பணி அரசாட்சி தான். அதனால் அதற்கான பொறுப்புகளை அறிந்து நிறுவனங்கள் இயங்க வேண்டும்” என அவர் தெரிவித்துள்ளார்.

வேல்சாமி சங்கரலிங்கம் பின்னணி:

தமிழகத்தின் விருதுநகரை சேர்ந்தவர். பள்ளி மற்றும் இளங்கலை பட்டப்படிப்பு வரை தமிழகத்தில் பயின்றவர். அமெரிக்காவில் முதுகலை பட்டப்படிப்பு முடித்துள்ளார். அமெரிக்காவில் Zoom நிறுவனத் தலைவர் எரிக் யுவானும், இவரும் இணைந்து ஒன்றாக ஒரே நிறுவனத்தில் பணியாற்றி உள்ளனர். Zoom நிறு வனம் தொடங்கிய சில ஆண்டுகளுக்கு பிறகு அதில் அவரும் இணைந்து பணியாற்றி வருகிறார்.

தமிழர் பொருளியல் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
28.01.2024

# மண் இல்லாமல் நவீன பயிர் சாகுபடி

அ.ராஜன்



**இதனால் விவசாயிகளின் நேரம் மிச்சமாவதுடன், கூலியாக கொடுக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான ரூபாயும் மிச்சமாகும். பொதுவாக பாரம்பரிய விவசாய முறையில்பயிரிட்டு அதன் பலனை அனுபவிக்க 90 நாட்கள் காத்திருக்க வேண்டிய சூழலில், ஹைட்ரோபோனிக்ஸ் விவசாய முறையில் 50 அல்லது 60 நாட்களிலேயே லாபம் பார்த்து விடலாம்.**

மக்கள்தொகை பெருக்கம், நகரமயமாதல் போன்ற காரணங்களால் உலகளவில் விவசாய நிலப்பரப்பு குறைந்து வருகிறது. இந்நிலையில் பாரம்பரிய வேளாண் முறைகளுக்கு மாற்றாக தற்போது விஞ்ஞானிகள் நவீன முறையில் விவசாயம் செய்வது குறித்த ஆய்வுப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதில் ஒன்றுதான் ஹைட்ரோபோனிக்ஸ் முறை. இந்த முறையில் மண்ணுக்குப் பதிலாக கோகோபீட் பயன்படுத்தப்படுகிறது. கோகோபீட் என்பது ஒரு இயற்கை நார் தூள். தேங்காய் ஓடுகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

தேங்காய் மஞ்சியை பயன்படுத்தும் ஹைட்ரோபோனிக்ஸ் முறையில், ஒரு ஏக்கரில் கிடைக்கும் மகசூலை கால் ஏக்கரில் பயிரிட்டு அதிக லாபம் பார்க்கலாம். காலநிலை மாறுபாடுகளால் பருவமழை, கனமழை குறித்து கணிக்க முடியாத தற்போதைய சூழலில் இந்த வேளாண் முறை விவசாயிகளுக்கு பெரிதும் பலனளிக்கும் என்பது வேளாண் விஞ்ஞானிகளின் கருத்து.

ஹைட்ரோபோனிக்ஸ் போன்றே ஏரோபோனிக்ஸ், ஆக்குவாபோனிக்ஸ் போன்ற நவீன விவசாய முறைகளிலும் தேவையில்லா களைச்செடிகள் வளர்வது தவிர்க்கப்படுகிறது. விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காத இந்த சூழலில் களையெடுக்க வேண்டிய அவசியமில்லை.

இதனால் விவசாயிகளின் நேரம் மிச்சமாவதுடன், கூலியாக கொடுக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான ரூபாயும் மிச்சமாகும். பொதுவாக பாரம்பரிய விவசாய முறையில்பயிரிட்டு அதன் பலனை அனுபவிக்க 90 நாட்கள் காத்திருக்க வேண்டிய சூழலில், ஹைட்ரோபோனிக்ஸ் விவசாய முறையில் 50 அல்லது 60 நாட்களிலேயே லாபம் பார்த்து விடலாம்.

பரீட்சார்த்த அளவில் கீரை, மூலிகைச் செடிகள், கால்நடை தீவனங்கள் போன்றவை இந்த முறையில் பயிரிடப்பட்டு நமக்கு வெற்றி கிடைத்தாலும், அதிக எடையுள்ள பயிர்களை இதில் வளர்க்க முடியவில்லை என்ற குறைபாடுஇருந்தது.

அதற்கு, தீர்வு காணும் வகையில் தற்போது எலக்ட்ரானிக் மண் (e-Soil) அதாவது மின்னணு மண் என்ற புதிய முறையை ஸ்வீடன் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இது வேளாண் தொழில்நுட்பத்தில் அற்புதமான கண்டுபிடிப்பாக கருதப்படுகிறது. ஸ்வீடன் லிங்கோப்பிங் பல்கலைக்கழக ஆய்வகங்களில் குறிப்பாக பார்லி நாற்றுகளில் இந்த மின்னணு மண் முறை பரிசோதிக்கப்பட்டுள்ளது.

பார்லி நாற்றுகளின் வேர்கள் மின்சாரம் மூலம் தூண்டப்படுவதால் 15 நாட்களுக்குள்ளாகவே பயிரின் வளர்ச்சியானது 50 சதவீதத்தை எட்டி விடுகிறது. மின் தூண்டுதலின் கீழ் நைட்ரஜன் மிக திறமையாக செயலாக்கப்பட்டாலும், உயிரியல்வழிமுறை குறித்து நாம் இன்னும் நிறைய அறிய வேண்டியுள்ளது என்கிறார் லிங்கோப்பிங் பல்கலைக்கழக பேராசிரியர் எலினி ஸ்டாவ்ரினிடோ.

நவீன பயிர் சாகுபடி முறையில் ஒவ்வொரு நாற்றுக்கும் துல்லியமான ஊட்டச்சத்து விநியோகத்தை உறுதி செய்வதில் விஞ்ஞானிகள் குழு வெற்றி கண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். இதனால், குறைந்தபட்ச நீர் பயன்பாடு, உகந்த ஊட்டச்சத்து தக்கவைப்பு ஆகியவை பயிர்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

செங்குத்து முறை பயிர் வளர்ப்பான ஏரோபோனிக்ஸ் உள்ளிட்ட உயரமான கட்டமைப்புகளை பயன்படுத்தி கீரை, மூலிகைகள், காய்கறிகள் போன்றவை வெற்றிகரமாக பயிரிடப்பட்டாலும், தானியங்களை விளைவிக்க முடியவில்லை என்ற குறையை தற்போதைய மின்னணு மண் வேளாண் தொழில்நுட்ப முறை போக்கியுள்ளது.

உலகளாவிய உணவுப் பாதுகாப்பு சவால்களுக்குஇதுபோன்ற நவீன விவசாய முறைகள் மட்டுமே தீர்வைஅளித்து விட முடியாது. எனினும், அது மகத்தான ஆற்றலை வழங்குகிறது. விளை நிலங்களுக்கு பற்றாக்குறை, கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புள்ள பகுதிகளில் இந்த வேளாண் முறை பெரிதும் கைகொடுக்கும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

# 3 டிரில்லியன் டாலர் சந்தை மதிப்பை எட்டியது மைக்ரோசாஃப்ட்!

ப்ரியா ரவிச்சந்திரன்




மைக்ரோசாஃப்ட் நிறுவனம், சந்தை மதிப்பில் 3 டிரில்லியன் டாலர் மதிப்பை எட்டியுள்ளது. இதன் மூலம் உலகின் மதிப்புமிக்க நிறுவனங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இணைந்துள்ளது. இதில் முதலிடத்தில் ஆப்பிள் நிறுவனம் உள்ளது.

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் பன்னாட்டு தொழில்நுட்ப கார்ப்பரேட் நிறுவனமாக அறியப்படுகிறது மைக்ரோசாஃப்ட். கடந்த 1975-ல் நிறுவப்பட்டது. கணினிகளை இயக்க உதவும் விண்டோஸ் இயங்குதளம், மைக்ரோசாஃப்ட் 365, ஸ்கைப் போன்ற பிராண்டுகளுக்காக மக்களிடையே இந்நிறுவனம் அறியப்படுகிறது. அண்மைய காலமாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சார்ந்து அதிகம் கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில் நடப்பு ஆண்டின் தொடக்கம் முதலே மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் பங்குகளின் மதிப்பு ஏற்றம் கண்டது. அந்நிறுவனத்தின் பங்குகள் 1.5 சதவீதம் ஏற்றம் கண்ட காரணத்தால் தற்போது அதன் பங்கின் விலை 404.72 டாலர்கள். அதன் மூலம் அந்நிறுவத்தின் சந்தை மதிப்பு 3 டிரியல்லன் டாலர்களை எட்டியுள்ளது. ஆப்பிள் நிறுவன பங்குகள் 0.14 சதவீதம் ஏற்றம் கண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏஐ சார்ந்த சேவைகளை பயனர்களுக்கு வழங்கியது மைக்ரோசாஃப்ட். இதற்காக ஓபன் ஏஐ நிறுவனத்துடன் கைகோர்த்தது. அதனால் முதலீட்டாளர்கள் ஆர்வம் கொண்டு மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தில் பங்குகளை வாங்கினர். அதனால் விலை ஏற்றம் கண்டுள்ளது. ஏஐ தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடு மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் வளர்ச்சியை நீடித்த மற்றும் நிலையான வகையில் கட்டமைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**AI சார்ந்த சேவைகளை பயனர்களுக்கு வழங்கியது மைக்ரோசாஃப்ட். இதற்காக ஓபன் AI நிறுவனத்துடன் கைகோர்த்தது. அதனால் முதலீட்டாளர்கள் ஆர்வம் கொண்டு மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தில் பங்குகளை வாங்கினர். அதனால் விலை ஏற்றம் கண்டுள்ளது.**

உணவுகளை மொத்தமாக வாங்குவதும், பீன்ஸ் மற்றும் மீன் போன்ற மலிவு விலை புரத மூலங்களைத் தேர்ந்தெடுப்பதும் இதில் அடங்கும்.

• தங்குமிடம்: வாழ்வதற்கு தகுந்த மற்றும் பாதுகாப்பான இடம் இருப்பது அவசியம். வாடகைக்கு இருந்தால், வாடகை கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமை கொடுங்கள் மற்றும் தேவைப்பட்டால் மலிவு, பகிரப்பட்ட தங்குமிடங்களில் கவனம் செலுத்துங்கள். சொந்த வீடு, அடமானங்களை மறுபரிசீலனை செய்வது அல்லது சிரமங்களை எதிர்கொண்டால் அரசாங்க உதவித் திட்டங்களைத் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

• சுகாதாரம் மற்றும் மருத்துவம்: அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் உட்பட அடிப்படை சுகாதாரத்திற்கான அணுகல் சமரசம் செய்யக்கூடாது. முடிந்தவரை அரசு மருத்துவமனைகள் மற்றும் மலிவு விலை கிளினிக்குகளைப் பயன்படுத்துங்கள்.

• கல்வி: குழந்தைகளுக்கான கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள், நிதிக் கட்டுப்பாடுகள் விருப்பங்களை மட்டுப்படுத்தினால், அவர்கள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதை அல்லது மாற்றுக் கற்றல் முறைகளை அணுகுவதை உறுதிசெய்தல் மிகவும் முக்கியமானது.

• போக்குவரத்து: வேலை, கல்வி மற்றும் சுகாதார தேவைகளுக்கு மலிவு மற்றும் அத்தியாவசிய போக்குவரத்தில் கவனம் செலுத்துங்கள். முடிந்தால் பொது போக்குவரத்து, கார்பூலிங் (Car Pull) அல்லது சைக்கிள் ஓட்டுதல் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் மற்றும் தனிப்பட்ட சூழ்நிலைகள், குடும்ப அளவு மற்றும் இருப்பிடத்தைப் பொறுத்து குறிப்பிட்ட தேவைகள் மாறுபடலாம்.

இலங்கையில் அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான சில கூடுதல் குறிப்புகள் இங்கே:

• பட்ஜெட்டை (Bubget) தயாரித்தல்: வருமானம் மற்றும் செலவுகளைக் கண்காணித்து, உங்கள் பணம் எங்கு செல்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு, நீங்கள் குறைக்கக்கூடிய பகுதிகளைக் கண்டறியவும்.

• விலைகளை ஒப்பிடுதல்: அத்தியாவசிய பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளல் மிகவும் அவசியம். முடிந்தவரை உள்ளூர் சந்தைகள் மற்றும் அரசு மானியம் பெறும் கடைகளைப் பயன்படுத்தவும்.

• வீட்டில் சமைத்தல்: வெளியே சாப்பிடுவது விலை உயர்ந்ததாக இருக்கும். பணத்தை மிச்சப்படுத்த மலிவு விலையில் பொருட்களைப் பயன்படுத்தி வீட்டில் உணவைத் தயாரிக்கவும்.

• அரசாங்க உதவியை நாடுங்கள்: கடினமான காலங்களில் குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவ இலங்கை அரசாங்கம் பல்வேறு திட்டங்களை வழங்குகின்றது. நிதிச் சுமையைக் குறைக்க இந்தத் திட்டங்களுக்கான தகுதியை ஆராயுங்கள்.

• குடும்பம் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்: உங்கள் அன்புக்குரியவர்களுடன் திறந்த தொடர்பு பகிரப்பட்ட தேவைகளை அடையாளம் காணவும் சவாலான நேரங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதற்கான வழிகளைக் கண்டறியவும் உதவும். அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், கவனத் துடன் செலவழிக்கும் பழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமும், இலங்கையில் உள்ள தனிநபர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்து நிதி ஸ்திரத்தன்மையை நோக்கி செயல்பட முடியும்.

• கடனைக் குறைக்க: முடிந்தால், கடனைச் செலுத்த முயற்சிக்கவும் அல்லது அதிக வட்டி கடன்களை ஒருங்கிணைக்கவும். இலங்கையில் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் தனிநபர்களுக்கான உத்திகளின் பின்னணியில் "கடனைக் குறைத்தல்" என்பது நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் மாதாந்த செலவினங்களை மிகவும் திறம்பட நிர்வகிப்பதற்கும் நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் பொறுப்புகளைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. இதற்கு ஏற்கனவே உள்ள கடனின் சுமையை குறைக்கவும் மேலும் குவிவதை தடுக்கவும் மூலோபாய நடவடிக்கைகள் தேவை.

இலங்கையர்களுக்கு ஏற்ற "கடனைக் குறைப்பதற்கான" சில பொதுவான எடுத்துக் காட்டுகள் பின்வருமாறு:

1. அதிக வட்டி கடன்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்: முதலில் அதிக வட்டி விகிதத்தில் கடன்களை செலுத்துவதில் கவனம் செலுத்துங்கள். இவை பொதுவாக கடன அட்டை (Loan on Credit Card) கடன், தனிநபர் கடன்கள் மற்றும் ஊதியக் கடன்கள் ஆகியவை அடங்கும். அதிக வட்டி விகிதங்கள் விரைவாக குவிந்து, நிதி முன்னேற்றத்தைத் தடுக்கின்றன.

2. கடன் ஒருங்கிணைப்பை பேச்சுவார்த்தை நடத்துங்கள்: பல சிறிய கடன்களை ஒரே கடனாக குறைந்த வட்டி விகிதத்தில் ஒருங்கிணைப்பது பற்றி உங்கள் கடன் வழங்குபவர்களிடம் பேசுங்கள். இது உங்கள் கட்டணங்களை எளிதாக்கும் மற்றும் செலுத்தப்படும் ஒட்டுமொத்த வட்டியைக் குறைக்கும்.

3. அரசாங்க உதவியைப் பயன்படுத்துங்கள்: இலங்கையில் சில அரசாங்க திட்டங்கள் கடன் நிவாரண முயற்சிகள் அல்லது கடனுடன் போராடும் குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்களுக்கு நிதி உதவி வழங்கலாம். அத்தகைய திட்டங்களுக்கான தகுதியை ஆராயுங்கள்.

4. மாற்றுக் கட்டணத் திட்டங்களைச் செயல்படுத்தவும்: கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீட்டிக்க கடன் வழங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் அல்லது சிறிய, அதிக நிர்வகிக்கக்கூடிய மாதாந்திர கொடுப்பனவுகளை ஏற்பாடு செய்யவும். இதன் மூலம் தற்காலிக நிவாரணம் வழங்குவதுடன், கடனை திருப்பி செலுத்தாமல் தடுக்க முடியும்.

5. மறுநிதியளிப்பு கடன்கள்: நீங்கள் கடனைப் பெற்றதிலிருந்து வட்டி விகிதங்கள் குறைந்திருந்தால், குறைந்த விகிதத்திற்கு மறுநிதியளிப்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். இது உங்கள் மாதாந்திர கொடுப்பனவுகளையும் செலுத்தப்படும் மொத்த வட்டியையும் கணிசமாகக் குறைக்கலாம்.

6. புதிய கடனைத் தவிர்க்கவும்: இந்த சவாலான நிதிக் காலத்தில் கூடுதல் கடன்களை வாங்குவதற்கான தூண்டுதலை எதிர்க்கவும். மேலும் கடன் குவிவதைத் தவிர்க்க, சேமிப்பதற்கும், உங்கள் வழியில் வாழ்வதற்கும் முன்னுரிமை கொடுங்கள்.

7. அத்தியாவசியமற்ற சொத்துக்களை விற்கவும்: உங்களுக்குத் தேவையில்லாத அல்லது பணத்தை உருவாக்குவதற்கும் கடனைச் செலுத்துவதற்கும் பயன்படுத்தாத பொருட்களை விற்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். சில நிதி ஆதாரங்களை விடுவிக்க இது ஒரு தற்காலிக நடவடிக்கையாக இருக்கலாம்.

8. வருமானத்தை அதிகரிக்கவும்: அதிக ஊதியம் பெறும் வேலையைக் கண்டறிவதன் மூலம் உங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிகளை ஆராயுங்கள். கூடுதல் வருமானம் பெரிய கடன் செலுத்துவதற்கு பயன்படுத்தப்படலாம்.

கடனைக் குறைப்பது என்பது ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்பு தேவைப்படும் படிப்படியான செயல்முறையாகும்.

இந்த உத்திகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், தேவைப்படும் போது ஆதரவைப் பெறுவதன் மூலமும், இலங்கையில் உள்ள தனிநபர்கள் தங்கள் கடனைக் கட்டுப்படுத்தி, தற்போதைய பொருளாதாரச் சிக்கல்களை அதிக நிதி நிலைத்தன்மை மற்றும் மன அமைதியுடன் வழி நடத்த முடியும்.

நிதி உதவியை நாடுங்கள்: இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிதி உதவி வழங்கும் பல அரசு மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் உள்ளன. இந்த வல்லுநர்கள் கடனை திறம்பட நிர்வகிப்பதற்கான தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதல்களையும் உத்திகளையும் வழங்க முடியும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த குடிமக்களுக்கான உத்திகள்

இலங்கையில் உள்ள மூத்த குடிமக்கள் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளுக்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏனெனில் அவர்கள் பணவீக்கத்தைத் தக்கவைக்காத நிலையான வருமானங்களைக் கொண்டிருக்கலாம். தங்கள் நிதியைப் பாதுகாக்க அவர்கள் எடுக்கக்கூடிய சில முறைமைகளை பார்ப்போம்:

- செலவழிக்கும் பழக்கத்தை மதிப்பாய்வு செய்யவும்: அத்தியாவசியமற்ற செலவுகளைக் குறைப்பதற்கான வழிகளைத் தேடுங்கள்.

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையில் உள்ள மூத்த குடிமக்களுக்கான "செலவுப் பழக்கவழக்கங்களை மறுபரிசீலனை செய்வது" அவர்களின் நிதி நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் வரையறுக்கப்பட்ட வருமானத்தைப் பயன்படுத்துவதற்கும் அவர்களின் செலவு முறைகளை பகுப்பாய்வு செய்து சரிசெய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இது கடந்த கால செலவுகளை தீவிரமாக மதிப்பாய்வு செய்வது, சேமிப்பிற்கான பகுதிகளை அடையாளம் காண்பது மற்றும் அவர்களின் பட்ஜெட்டை (Budget) மேம்படுத்துவதற்கான நடைமுறை உத்திகளை செயல்படுத்துவது ஆகியவை அடங்கும்.

◦ இலங்கையில் மூத்த குடிமக்களுக்கான செலவு பழக்கங்களை மதிப்பாய்வு செய்வதற்கான சில பொதுவான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

1. செலவுகளைக் கண்காணிக்கவும்: தினசரி, வாராந்திர அல்லது மாதாந்திர செலவுகளின் பதிவை நியாயமான காலத்திற்குப் பராமரிப்பது, செலவு முறைகள் மற்றும் வெட்டுக்களுக்கான சாத்தியமான பகுதிகளைக் கண்டறிய உதவுகின்றது. செலவுகளை எளிதாகக் கண்காணிக்க எளிய நோட்புக் (Note Book), விரிதாள் அல்லது மொபைல் பயன்பாட்டைப் பயன்படுத்தவும்.

2. செலவுகளை வகைப்படுத்தவும்: உணவு, வீட்டுவசதி, சுகாதாரம், பயன்பாடுகள் மற்றும் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய வகைகளாக செலவுகளை பிரிக்கவும். இந்த வகைப்படுத்தல் பணத்தின் பெரும்பகுதி எங்கு செல்கின்றது என்பதைக் காட்சிப்படுத்தவும் அத்தியாவசிய செலவினங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் உதவுகின்றது.

3. அத்தியாவசியமற்ற செலவுகளை அடையாளம் காணவும்: ஒவ்வொரு வகையையும் பகுப்பாய்வு செய்து, குறைக்க அல்லது நீக்கக்கூடிய அத்தியாவசியமற்ற செலவுகளைக் கண்டறியவும். இதில் சந்தாக்கள், பொழுதுபோக்குச் செலவுகள், உந்துவிசை வாங்குதல் அல்லது அடிக்கடி வெளியே உணவருந்துதல் ஆகியவை அடங்கும்.

4. நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும்: தொலைபேசி அல்லது இணைய நிறுவனங்கள் போன்ற சேவை வழங்குநர்களைத் தொடர்புகொண்டு குறைந்த கட்டணத்தில் பேச்சுவார்த்தை நடத்தவும் அல்லது சில வணிகங்கள் வழங்கும் மூத்த குடிமக்கள் தள்ளுபடியைப் பெறவும்.

5. செலவு-சேமிப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தவும்: உணவு மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு அரசு மானியம் வழங்கும் விருப்பங்களை ஆராயுங்கள். இலவச சமூக நிகழ்வுகளில் கலந்துகொள்ளுங்கள் அல்லது கட்டண விருப்பங்களுக்குப் பதிலாக பொது நூலகங்களை பொழுதுபோக்குக்காகப் பயன்படுத்துங்கள்.

6. வீட்டிலேயே சமைக்கவும்: பருப்பு, காய்கறிகள் மற்றும் உள்ளூர் மீன் போன்ற மலிவு பொருட்களைப் பயன்படுத்தி வீட்டிலேயே உணவைத் தயாரிக்கவும், வெளியில் சாப்பிடுவது அல்லது பதப்படுத்தப்பட்ட உணவுகளை நம்புவதை கணிசமாக குறைத்துக் கொள்ளலாம்.

7. மாற்றுப் போக்குவரத்தைக் கவனியுங்கள்: டாக்சிகள் (Taxi) அல்லது தனியார் வாகனங்களை நம்புவதற்குப் பதிலாக அத்தியாவசியப் பயணங்களுக்கு பேருந்துகள் அல்லது ரயில்கள்(Trains) போன்ற பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தவும். குறுகிய தூரத்திற்கு நடைபயிற்சி அல்லது சைக்கிள் ஓட்டுதல் போக்குவரத்து செலவுகளை மேலும் குறைக்கலாம்.

8. பண்டமாற்று முறையைப் பயன்தவும் அல்லது வளங்களைப் பகிரவும்: உங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு அண்டை வீட்டார் அல்லது நண்பர்களுடன் பண்டமாற்றுத் திறன் அல்லது வீட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களைக் கருத்தில் கொள்ளுங்கள். நம்பகமான நபர்களுடன் தோட்டக்கலை கருவிகள் அல்லது வீட்டு உபயோகப் பொருட்கள் போன்ற ஆதாரங்களைப் பகிர்வது தனிப்பட்ட செலவுகளைக் குறைக்கும்.

9. குடும்ப ஆதரவைத் தேடுங்கள்: குடும்ப உறுப்பினர்களுடன் திறந்த தொடர்பு, பகிரப்பட்ட தேவைகளை அடையாளம் காணவும், நிதி ரீதியாக ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதற்கான வழிகளை ஆராயவும் உதவும். வளங்களை மேம்படுத்த வாழ்க்கை ஏற்பாடுகள் அல்லது பகிரப்பட்ட உணவுத் திட்டங்களைக் கவனியுங்கள்.

10. மூத்த குடிமக்கள் உதவித் திட்டங்களைப் பயன்படுத்துங்கள்: இலங்கையில் உள்ள மூத்த குடிமக்களுக்கு குறிப்பாக நிதி உதவி, மானிய சேவைகள் அல்லது சமூக ஆதரவை வழங்கும் அரசு திட்டங்கள் அல்லது இலாப நோக்கற்ற நிறுவனங்களை ஆராயுங்கள்.

செலவழிக்கும் பழக்கத்தை மதிப்பாய்வு செய்வது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், ஒரு முறை நிகழ்வு அல்ல. உங்கள் வரவு-செலவுத் திட்டத்தை தவறாமல் மதிப்பாய்வு செய்யவும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கவும், தேவைப்படும்போது குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது சமூக ஆதாரங்களின் உதவியைப் பெறத் தயங்காதீர்கள்.

தங்கள் செலவினப் பழக்கங்களை தீவிரமாக மதிப்பாய்வு செய்து, சீர்திருத்துவதன் மூலம், இலங்கையில் உள்ள மூத்த குடிமக்கள் பொருளாதார நெருக்கடியை அதிக நிதிப் பாதுகாப்போடு வழிநடத்தி நல்ல வாழ்க்கைத் தரத்தைப் பேண முடியும்.

- அரசாங்க சலுகைகளை நாடுங்கள்: இலங்கையில் உள்ள முதியவர்கள் ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் மானியத்துடன் கூடிய சுகாதார பராமரிப்பு போன்ற பல அரசாங்க நன்மைகளுக்கும் சலுகைகளுக்கும் தகுதியுடையவர்கள்.
- குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பேசுங்கள்: கடினமான காலங்களில் சமூக ஆதரவு விலைமதிப்பற்றதாக இருக்கும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கையில் உள்ள மூத்த குடிமக்களுக்கான உத்திகளின் பின்னணியில், "குடும்பத்துடனும் நண்பர்களுடனும் பேசுதல்" என்பது, நிதிச் சிக்கல்களைச் சமாளிப்பதற்கும் உணர்வுப் பூர்வமான நல்வாழ்வைப் பேணுவதற்கும் பெறுமதியான ஆதாரங்களாக திறந்த தொடர்பு மற்றும் சமூக ஆதரவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பேசுவது இலங்கையில் உள்ள மூத்த குடிமக்கள் எவ்வாறு பயனடையலாம் என்பதற்கான சில பொதுவான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

1. கவலைகளைப் பகிர்ந்துகொள்வது மற்றும் ஆலோசனையைப் பெறுதல்: நம்பகமான குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களுடன் நிதிக் கவலைகள் மற்றும் சவால்களைப் பற்றி வெளிப்படையாக விவாதிப்பது உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்குவதோடு அவர்களின் சொந்த அனுபவங்களின் அடிப்படையில் பயனுள்ள ஆலோசனைகள் அல்லது பரிந்துரைகளுக்கு வழிவகுக்கும்.

2. ஆதரவு விருப்பங்களை ஆராய்தல்: குடும்பம் மற்றும் நண்பர்கள் அரசாங்க உதவி திட்டங்கள், மானிய சேவைகள் அல்லது உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் குறிப்பாக நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் மூத்த குடிமக்களுக்கு வழங்குவது பற்றி அறிந்திருக்கலாம்.

(அடுத்த வாரம் தொடரும்...)

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!


*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்








4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2024இல் வெளியிடப்பெற்றது.